# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු






வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 03.04.2021 சனிக்கிழமை | இதழ் : 124 | பக்கங்கள் : 16




**05**

வடக்கு-கிழக்கு எம்.
பிக்களுக்கு வெளிநாடு
களில் இருந்து பணம்



**08**

'ரெய்டில் பிடிபட்ட
மொத்த பணமே
5 சதவிகிதம்தான்"



**11**

அரசமைப்புக்கு
முரணாக அரசாங்கம்
செயல்படாது



**12**

ஆயர் யோசேப்பு ஆண்டகை
யின் வாழ்வும் பணிகளும்!

"நான் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்லன்"

# ஒன்பது மாகாணங்களுக்கும் தனித்தனி நிர்வாகம் கூடாது

## யாழில் சரத் வீரசேகர திட்டவட்டம் இந்தியா, விக்கி மீதும் கடும் சாடல்



யாழ்ப்பாணம், ஏப்ரல் 03

''மாகாண சபை முறைமை என்பது ஒரு தேவையற்ற ஒரு விடயமாகும். ஒன்பது மாகாண சபைகள் காணப்படும்போது அந்த ஒன்பது மாகாண சபைக்கும் தனி நிர்வாகம் காணப்படும். மத்திய அரசாங்கம் என்பது தனியாகச் செயல்பட வேண்டி வரும். ஆனால், மத்திய அரசாங்கம் என்பது ஒன்று தான். ஒன்பது மாகாணங்களுக்கும் தனித்தனி நிர்வாகம் இருக்க முடியாது.''

-இவ்வாறு யாழில் நேற்று தெரிவித்துள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர.

15

## இராயப்பு ஆண்டகைக்கு பெருமளவு மக்கள் அஞ்சலி



மன்னார், ஏப். 03

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக மன்னார் ஆயர் இல்லத்தில் உள்ள சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆண்டகையின் பூதவுடல், நேற்று

15

## கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி!

கொழும்பு,ஏப்.03

இலங்கையில் மேலும் 63 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நேற்று இரவு 10 மணிவரையில் 183 பேருக்கு மட்டுமே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-எ)

## முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 03

சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் மீது இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டதில் அவர் படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய

15

## யாழில் ஆறு பேருக்கு கொரோனா தொற்று

### 7 ஆவது மரணம் பதிவு

யாழ்ப்பாணம்,ஏப்.03

யாழ்ப்பாணத்தில் மேலும் ஆறு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று வெள்ளிக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

15

## வடக்கு-கிழக்கில் திங்கள் தமிழ் தேசிய துக்க தினம்

யாழ்ப்பாணம், ஏப். 03

மன்னார் மறைமாவட்டத்தின் ஒய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இறைபதமடைந்ததை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை தமிழ்த் தேசிய துக்க தினமாகவும் பிரகடனப்படுத்தப் படுத்து கின்றோம் என்று வடக்கு - கிழக்கு சிவில்

15

## பிரபல ஆசான் அன்பழகன் காலமானார்



யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர்களுள் ஒருவரான வே. அன்பழகன் (வயது 46) நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

தரம் 5 புலமைப்

15

## வெள்ளவத்தையில் புத்தசாலைக்கு 'சீல்'

### மத ரீதியான நூல்கள் இருந்ததாக தகவல்

கொழும்பு, ஏப்ரல் 03

வெள்ளவத்தையிலுள்ள சர்வதேச பாடசாலைகளுக்கான நூல்களை விற்பனை செய்யும் புத்தகசாலை ஒன்றின் களஞ்சியசாலை நேற்று பொலிசாரினால் அதிரடியாக சீல் வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட களஞ்சிய சாலையில் மத ரீதியான

15

## அவிசாவளை வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் பலி

### இருவருக்கு காயம்

கொழும்பு, ஏப். 03

அவிசாவளை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வெடிப்பு சம்பவமொன்றில் ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

அவிசாவளை, புவக்பிட்டிய பகுதியைச் சேர்ந்த மூர்த்தி (வயது - 40)

15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பது மாகாணங்...

அதேவேளை, ''நான் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்லன். ஆனால், மாகாண சபை முறைமைக்கு சரத் வீரசேகர ஆகிய நான் எதிரானவன். அன்றும் எதிர்த்தேன் இன்றும் எதிர்க்கின்றேன். நாளையும் அதே கருத்தை தான் கொண்டுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று மருதங்கேணியில் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்தபின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

"வடக்கில் இரண்டு பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்காக நான் வந்துள்ளேன். மல்லாவி மற்றும் மருதங்கேணி பகுதிகளில் பொது மக்களின் பிரச்னையைத் தீர்க்கும்முகமாக வடபகுதியில் இந்த இரண்டு பொலிஸ் நிலையங்களையும் திறந்திருக்கிறேன். தற்போது நாடு பூராகவும் 494 பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக இன்னும் 190 பொலிஸ் நிலையங்களைப் புதிதாக அமைக்கவுள்ளோம்.

அந்த வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் வடபகுதியில் இரண்டு புதிய பொலிஸ் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு பொதுமக்கள் தூர இடங்களுக்குச் சென்று தமது பொலிஸ் சேவையைப் பெற்றுக்கொள்வதைத் தவிர்க்க இதனைச் செய்துள்ளோம். தற்பொழுது நான் பொதுமக்களிடம் உரையாடும் போது பொதுமக்கள் தமது பிரச்னைகளைக் கூறும் போது இந்தப் பிரச்னையை எனக்குக் கூறினார்கள். அதற்கு ஒரு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஆனால், வேலையில்லாப் பிரச்னை தான் இந்த மணல் கடத்தலுக்கு காரணமாக இருக்கின்றது. எனவே, கல்வி கற்று வேலையற்றுள்ளோர், கல்வியை இடையே நிறுத்தி வேலைவாய்ப்புக்கள் இன்றி இருப்போருக்கு வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுப்பதன் மூலம் இந்த சட்டவிரோத மணல் கடத்தலைத் தடுத்து நிறுத்த முடியும். இங்கே உள்ள இளைஞர்- யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை வழங்குமிடத்து வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சட்டவிரோத மணல் கடத்தலைக் கட்டுப்படுத்த முடியும். எனவே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து இந்தப் பகுதியில் இளைஞர் - யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக நான் யோசித்துள்ளேன்.

அத்தோடு இவ்வாறு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதன் மூலம் இந்த இளைஞர் - யுவதிகள் சட்டவிரோத செயல்பாட்டில் ஈடுபடமாட்டார்கள். எனினும் அவ்வாறு சட்டவிரோதமான மணல் கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளேன்.

அத்தோடு புங்குடுதீவு பகுதியில் புதிதாக பொலிஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இப்போது (இன்று) ஆரம்பித்திருக்கின்ற வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக அது அமைக்கப்படும்.

மேலும், மாகாண சபை முறைமைக்கு சரத் வீரசேகர ஆகிய நான் எதிரானவன். அன்றும் எதிர்த்தேன் இன்றும் எதிர்க்கின்றேன். நாளையும் அதே கருத்தை தான் கொண்டுள்ளேன். அது இந்தியாவால் எமக்கு பலவந்தமாக திணிக்கப்பட்ட ஒன்று.

மாகாண சபை முறைமை என்பது ஒரு தேவையற்ற ஒரு விடயமாகும். ஒன்பது மாகாண சபைகள் காணப்படும்போது அந்த 9 மாகாண சபைக்கும் தனியான நிர்வாகம் காணப்படும். மத்திய அரசு என்பது தனியாகச் செயல்படவேண்டி வரும். ஆனால், மத்திய அரசாங்கம் என்பது ஒன்று தான். ஒன்பது மாகாணத்துக்கும் தனியான நிர்வாகம் இருக்க முடியாது.

ஆனால், அரசாங்கம் மாகாண சபை முறை வேண்டும் என தீர்மானிக்குமானால் அந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கப் போவதில்லை.

இந்தப் பிரதேசத்தில் மாகாண சபை இல்லாது போய் மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. தற்பொழுது அபிவிருத்தி தடைப்பட்டுள்ளது.

ஆனால், கடந்த முறை ஆட்சியில் இருந்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மத்திய அரசாங்கத்தால் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் அரைவாசி நிதியைப் பயன்படுத்தாது திறைசேரிக்குத் திருப்பி அனுப்பியுள்ளார். இந்த நிலைமைதான் இங்கே காணப்படுகின்றது.

ஆகவே, மாகாண சபை என்பது மக்களுக்குப் பிரயோசனமான ஒரு விடயமாக அமைய வேண்டும்.

எனினும் வடக்கு மக்கள் மாகாண சபையை விரும்புகின்றார்கள். அது ஓர் அரசியல் காரணமாக இருக்கலாம். ஆனால், சரத் வீரசேகர ஆகிய நான் தனிப்பட்ட ரீதியில் மாகாண சபை முறைமைக்கு எதிரானவன்.

ஆனால், அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தீர்மானித்தால் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு ஏற்றவாறு நான் செயல்படத் தயாராகவுள்ளேன்- என்றார். (அ-எ-03)

## இராயப்பு...

முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து பேரணியாக மன்னாருக்கு எடுத்து செல்லப்பட்டது.

இதன்போது, மன்னார் மாவட்டம் முழுவதிலும் உள்ள அனைத்து மத மக்களும் இணைந்து வீதிக்கு இரு மருங்கிலும் கருப்புக் கொடிகளை நாட்டி பேரணியில் கலந்துகொண்டனர்.

தேவன் பிட்டிப் பகுதிகளில் இருந்து மக்கள் மலர் தூவி மோட்டார் சைக்கிளிலும் வாகனங்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் மன்னார் ஆயர் இல்லம் வரை ஊர்வலமாக ஆயரின் பூதவுடல் எடுத்து வரப்பட்டது.

பிற்பகல் 2.45 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்திற்கு கொண்டு வரப்பட்ட பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக மன்னார் ஆயர் இல்லத்தில் உள்ள சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

ஆயரின் உடலுக்கு அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட மன்னார் மாவட்டத்தில் உள்ள பொது மக்களும் இணைந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதேவேளை, நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணியளவில் பவனியாக அவரது பூதவுடல் ஆயர் இல்லத்தில் இருந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு ஞாயிற்றுக்கிழமை மாலை தொடக்கம் திங்கட்கிழமை மதியம் இரண்டு மணிவரை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து திங்கட்கிழமை மாலை மூன்று மணியளவில் பேராலயத்தில் இறுதித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள். அதனைத் தொடர்ந்து பூதவுடல் குறித்த பேராலயத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளவத்தையில்...

நூல்கள் இருப்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்தே அதனைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய பொலிஸார் அதனை சீல் வைத்துள்ளார்கள்.

குறிப்பிட்ட களஞ்சியசாலையில் சுமார் 15,000 நூல்கள் காணப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர். குறிப்பிட்ட புத்தகங்கள் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருந்தது.

களஞ்சியசாலையை சீல் வைத்த பொலிஸார் அங்கிருந்த சில நூல்களை - அதன் உள்ளடக்கம் என்ன என்பதை அறிந்துகொள்வதற்காக எடுத்துச்சென்றுள்ளார்கள்.

# சீனாவின் ஆதரவுக்கு இலங்கை பாராட்டு

கொழும்பு,ஏப்.03

பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவை இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென் ஹொங் நேற்று முன்தினம் வெளிநாட்டு அமைச்சில் வைத்து மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வின் போது இலங்கைக்கு சீனா அளித்த நிலையான ஆதரவுக்காக இலங்கை அரசாங்கத்தின் நேர்மையான பாராட்டுக்களை பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை விஷேட முதலீட்டு வலயம் ஆகியவற்றில் மூன்றாம் தரப்பு நாடுகளுடனான முதலீடு மற்றும் வணிக வாய்ப்புக்களைத் தொடர்வதற்காக ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான உறுதிப்பாட்டை சீனத் தூதுவர் மீண்டும் வலியுறுத்தினார்.

மாணவர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் அறிஞர் குழுவினரின் பங்களிப்புடன் லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் ஏற்பாடு செய்து வரும் அங்குரார்ப்பணக் கருத்தரங்கு வெபினார் தொடரில் பங்கேற்பதற்காக தூதுவர் மாண்புமிகு கி சென் ஹொங்க்கு இராஜாங்க அமைச்சர் அழைப்பு விடுத்ததுடன், அதனை சீனத் தூதுவர் ஏற்றுக்கொண்டார். (எ)

## பிரபல ஆசான்...

பரிசில் பரீட்சை வழிகாட்டலில் பிரபலமான இவர் பல ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கியுள்ளார். இவரின் தனியார் கல்வி நிறுவனத்தில் பல ஆயிரம் மாணவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்து கல்வி பயின்றனர்.

நீண்டநாட்களாக நீரிழிவு, புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று காலமானார். (ஐ)

## வடக்கு...

அமைப்புகள் அறிவித்துள்ளன.

இது தொடர்பில் அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை நேற்று இயற்கை எய்திய செய்தி தமிழர் தேசத்தினை ஆழாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

ஆயர் அவர்களின் இழப்பானது தமிழர் தேசத்திற்கு அளவிடமுடியாத ஒரு பேரிழப்பாகும். அவரின் இழப்பால் தமிழ் தேசியம் ஒரு சிறந்த தலைவனை இழந்து நிற்கின்றது.

தமிழரின் உரிமைக்காக மதங்களை கடந்து தேசியத்தின் பால் ஓங்கி ஒலித்த குரலை தமிழர் தேசம் இன்று இழந்து நிற்கின்றது .

2009ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழர் தேசம் திக்கற்றவர்களாக நின்ற நேரம் அவர்களுக்கு நம்பிக்கை ஒளியாக விளங்கியவர். தமிழினத்தின் மீதான இனப்படுகொலையை, இறுதிப் போரில் கொல்லப்பட்ட போது மக்களின் எண்ணிக்கையை பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும்பொது வெளியிலும் சர்வதேசத்திலும் அறுதியிட்டு தெரிவித்தவர்.

பாதிக்கப்பட்ட தமிழினத்தின் நீதி குரலாக, சாட்சியாக இருந்த மிகப்பெரும் ஆளுமையை நாம் இன்று இழந்துநிற்கின்றோம்.

ஆண்டகை அவர்களின் மறைவை யொட்டி அவரால் தமிழ் தேசியத்திற்கு ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக இன்று முதல் இறுதி வணக்க நிகழ்வு வரை வடக்குகிழக்கு இணைந்த தமிழர் தேசம் எங்கும் துக்கதினங்களாகவும், எதிர்வரும் திங்கட்கிழமை தமிழ்த் தேசிய துக்க தினமாகவும் பிரகடனபடுத்தப்படுத்துகின்றோம்.

இதற்கு தமிழ்த் தேசிய கட்சிகள், பொது மக்கள் அனைவரும் ஆதரவு வழங்குவதுடன், திங்கட்கிழமை அனைவரும் தங்களின் வீடுகளிலும், பொது இடங்களிலும், வணிக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டும், உங்கள் உடைகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்தும் துக்கத்தை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதே நாளில் தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசம் எங்கும் வாழும் தமிழ்மக்களும் கறுப்புப்பட்டி அணிந்து தங்கள் துக்கத்தைவெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்-என்றுள்ளது.

## அவிசாவளை...

என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவிசாவளை - இரத்தினபுரி பிரதான வீதியின் மாதொல பகுதியிலுள்ள இரும்பு பொருள் சேகரிப்பு நிலையமொன்றிலேயே குறித்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரிவாயு சிலிண்டர் ஒன்று வெடித்தாலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

## முன்னணியின்...

சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார். தமது சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் நடக்கும் சட்டத்துக்குப் புறம்பான செயல்களுக்கு எதிராக உறுப்பினரின் தலைமையில் இளைஞர்கள் ஒன்று கூடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் நாவற்குழி பகுதியில் வீடொன்றினுள் புகுந்த திருட்டுக் கும்பல் வீட்டில் இருந்த பெறுமதியான பொருள்களை திருடி சென்றிருந்தன.

இது தொடர்பில் தகவல் அறிந்த உறுப்பினர் உள்ளிட்ட இளைஞர்கள் விசாரணைகளை முன்னெடுத்து 12 மணி நேரத்தில் திருட்டு கும்பலை அடையாளம் கண்டு , அவர்களை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன் , களவாட பட்ட பொருள்களையும் மீட்டிருந்தனர்.

இந்நிலையிலையே குறித்த உறுப்பினர் மீது நேற்று வெள்ளிக்கிழமை இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## யாழில் ஆறு...

இவர்களில் யாழ்ப்பாணம் மாநகரைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்றும் கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடம் இரண்டிலும் 470 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 6 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரில் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த 84 வயது பெண்ணொருவர் உயிரிழந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையின் போதே அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் 7ஆவது நபர் கொரோனா தொற்றால் உயிரிழந்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சாவகச்சேரி பொதுச் சந்தையில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நாவற்குழியைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர் சந்தைக்கு வருகை தந்த நிலையில் கண்டறியப்பட்டவர்.

பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

வெரித்தாஸ் வானொலியை அதன் மற்றைய எல்லா நேயர்களிலும் பார்க்க ஈழத்து நேயர்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

எண்பதுகளில் யாழ்ப்பாணத்தின் நல்லூரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தை வெரித்தாஸ் வானொலியைக் கேட்டே யாழ்ப்பாணத்தில் இயங்கிய பத்திரிகைகள் அறிந்துகொண்ட சம்பவங்களும் நடந்தேறியிருக்கின்றன.

கத்தோலிக்க திருச்சபையால் பிலிப்பைன்சிலிருந்து நடாத்தப்பட்ட அந்த வானொலிக்கு லட்சக்கணக்கான நேயர்கள் இருந்தார்கள்.

தொண்ணூறுகளின் கடைசிப்பகுதியில் அதன் தமிழ்ச் சேவைப்பணிப்பாளராக இருந்தவர் அருட்பணி ஜெகத் கஸ்பர் ராஜ் அடிகளார். தமிழ்த் தேசிய உணர்வாளரான அவர், ஈழத்தில் தமிழ் மக்கள் படுகின்ற அவலங்களை உலகுக்கு எடுத்துச் செல்வதில் முக்கிய பங்காற்றியவர்.

பாரிஸ் நகரத்திலிருந்து ஒலிபரப்பான வானொலியில் வெரித்தாஸ் நிகழ்ச்சிகள் மறுஒலிபரப்பாகி வந்ததால், அவருக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏராளமான நேயர்கள் இருந்தார்கள். இதனால் அவர் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் மிகப்பிரபல்யம் பெற்ற ஒருவராக இருந்தார். அடிக்கடி ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா, அமெரிக்க நாடுகளுக்கு பயணம்செய்து நேயர்களோடு நெருக்கமாக இருந்தார்.

தனது பணியை அவர் முடித்துக்கொண்டு தாயகம் திரும்புவதற்கு முன்பாக வெரித்தாஸ் வானொலியின் ஐம்பதாவது ஆண்டு விழாவை சிறப்பாக செய்ய விரும்பி அதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இரண்டாயிரமாம் ஆண்டில் விழா ஜெர்மனியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தனது தாயகமான தமிழகத்துக்கு திரும்பி இறைபணி செய்யவிருந்த கஸ்பர் ராஜ் அடிகளார், அந்த விழாவில் சென்னையிலிருந்து முக்கிய பிரமுகர் ஒருவரையும் அழைத்திருந்தார். அவரை இந்த விழாவுக்கு அழைப்பதன் மூலம் தனக்கு அவர் தாயகத்தில் உதவியாக இருப்பார் என்று அவர் கருதியிருக்கலாம். ஏனெனில் அந்த விழாவுக்கு வந்திருந்தவர், அப்போது முதல்வராக இருந்த கலைஞர் மு கரணாநிதிக்கு மிக நெருக்கமானவர். சென்னையில் பணியாற்றிய அருட்பணியாளர் அவர்.

இந்த விழாவுக்கு இலங்கையிலிருந்து மூன்று ஆயர்கள் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்திருந்தனர். அவர்களில் ஒருவர் இறைபதமடைந்த மன்னார் ஆயர் யோசப்பு இராயப்பு ஆண்டகை.

விழாவில் ஏராளமான நேயர்கள் கலந்துகொண்டிருந்தனர். மண்டபம் நிரம்பிய மக்கள் கூட்டம். ஜெர்மனியில் என்றால் யார் அவர்கள் என்பது சொல்லவேண்டியதில்லை. முழுக்க முழுக்க ஈழத் தமிழர்கள்.

விழாவில் பேசிய அந்த சென்னை அருட்பணியாளர், முன்னால் இருந்த மக்களுக்காகவே, அவர்களிடம் கைதட்டு வாங்கவேண்டும் என்பதற்காகவே உரையாற்றினர்.

"நாங்கள் தமிழகத்தில் இருந்தாலும் ஈழத்தில் எமது மக்கள் படுகின்ற துன்பங்களைக் கண்டு துடித்துக்கொண்டிருக்கின்றோம்.." என்று தொடங்கியவர் கைதட்டுக்கள் அதிகரிக்க அதிகரிக்க இன்னும் உணர்ச்சி பொங்க பேசினார்.

அவர் பேசி முடிந்த பின்னர், மன்னார் ஆயரின் முறை. பேச வந்தவர் மேடையிலிருந்த அந்த சென்னை பிரமுகரைத் திரும்பிப் பார்த்து கேட்டார், "என்னைத் தெரிகிறதா?" என்று

"உங்கள் அலுவலகத்தில் வந்து பல மணி நேரம் காத்திருந்தேன் உங்களைச் சந்திப்பதற்காக, உங்கள் மூலம் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து ஈழத் தமிழர்களின் அவலங்களை எடுத்தச் சொல்வதற்காக. ஆனால் நீங்கள் எங்களைக் கண்டுகொள்ளவே இல்லை.

ஆனால் இங்கு வந்து கைதட்டுக்காக உணர்ச்சிகளை கொட்டுகின்றீர்கள். ஒரு கத்தோலிக்கனாக இருந்திருந்தாலே அன்று எங்களுக்கு உதவியிருக்கலாம்...."

மன்னார் ஆயர் முகத்துக்கு நேரே கேட்டது அவரை சங்கடப்படுத்தியது.

மன்னார் ஆயர் மறைந்து விட்ட செய்தியைப் படித்தபோது இந்தச் சம்பவம்தான் ஞாபகத்திற்கு வந்தது.

கொடுமைகளைக் கண்டு எப்போதுமே பொங்கி எழுந்தவர் அவர்.

அவர் ஆத்மா சாந்தியடையட்டும்!

**- ஊர்க்குருவி.**

# பலத்த பாதுகாப்புக்குள் மட்டு. வில் புனித வெள்ளி விசேட வழிபாடுகள்!

**மட்டக்களப்பு, ஏப். 03**

**இயேசுபிரான் சிலுவையில் அறையப்பட்டதை நினைவுகூரும் திருப்பாடுகளின் பெரிய வெள்ளி விசேட ஆராதனைகள் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நேற்று இடம்பெற்றன.**



2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் தற்கொலை தாக்குதல் இடம்பெற்ற மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலும் விசேட ஆராதனைகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்றன.சீயோன் தேவாலயத்தின் பிரதம போதகர் றொசான் மகேசன் தலைமையில் இந்த வழிபாடு இடம்பெற்றது.

அதிகளவான இறைவிசுவாசிகளின் பங்கேற்புடன் ஆரம்பமான ஆராதனையில் இயேசுவின் திருப்பாடுகளை பறைசாற்றி நிற்கும் திருப்பாடல்கள் இசைக்கப்பட்டதனைத் தொடர்ந்து, பிரதம போதகரின் பிரசங்கம் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து விசேட ஆராதனைகள் நிறைவடைந்தன. பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் குறித்த ஆராதனை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அடிப்படைவாத கருத்துக்களை பரப்பிய இரு இளைஞர்கள் கைது!

*மட்டக்களப்பு, ஏப். 03*

அடிப்படைவாத கருத்துக்களை வட்ஸ் அப் ஊடாக பகிர்ந்தமை தொடர்பில் மட்டக்களப்பு காத்தான்குடியில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயங்கரவாத விசாரணை பிரிவினால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

28 மற்றும் 29 வயதான இரண்டு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கட்டாரிலிருந்து அண்மையில் நாடு கடத்தப்பட்ட நிலையில், இவ்விருவரும் காத்தான்குடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

"வன் உம்மா" (ஒரே சமூகம்) எனும் வட்ஸப் செயலி ஊடாக பல்வேறுப்பட்ட தகவல்களை பகிர்ந்தமை, பல்வேறு தரப்பினரை வஹாப்வாதம் மற்றும் அடிப்படைவாதத்தில் ஈடுபடுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைவாழ் முஸ்லிம் மக்களின் கோட்பாடுகளுக்கு மாறுபட்ட அடிப்படைவாத கருத்துக்களை சந்தேகநபர்கள் பகிர்ந்துள்ளனர். சஹ்ரான் ஹாஷிமினால் நடத்தப்பட்ட போதனைகள் மற்றும் அடிப்படைவாதங்களை பரப்பியமைக்கான காணொலிகள், நிழல்படங்கள் போன்வற்றை பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னர் இணையதளத்தில் சந்தேகநபர்கள் பகிர்ந்துள்ளனர் என்றும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இவர்கள் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் தகவல்களை பகிர்ந்தமைக்காக கட்டார் நாட்டில் கைதாகி நாடு கடத்தப்பட்டவர்கள். இந்நிலையில் நாடுகடத்தப்பட்ட 6 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விடுதலை போராட்டத்தின் நியாயத் தராசு ஆண்டகை!

### ஐங்கரநேசன் அஞ்சலி

*யாழ்ப்பாணம், ஏப். 03*

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அது கருக்கொண்ட காலம் முதல் கத்தோலிக்க மதகுருமார்கள் பலர் காத்திரமான பங்களிப்பைச் செய்து வந்துள்ளனர். இவர்களில் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை முதன்மையானவர். தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் மதத்தின் குரலாக அல்லாமல் இனத்தின் குரலாகவே ஒலித்தவர். அதேசமயம் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தராசாகவும் விளங்கியவர். மதத்தையும் தாண்டிய தனது நடுநிலை தவறாத இனப் பற்றால் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின்பால் சர்வதேசங்களின் பார்வையைக் குவித்தவர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவு குறித்து பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள அஞ்சலிக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நெஞ்சுரம் மிக்கவர். முள்ளிவாய்க்காலில் படையினரிடம் சரணடைந்தவர்களின் பாதுகாப்பின் பொருட்டுக் கூடவே சென்ற பிரான்சிஸ் யோசப் அடிகளார் உட்பட தமிழ்த் தேசியத்தின்பால் பற்றுக்கொண்ட பல குருமார்கள் காணாமல் ஆக்கப்பட்டமை முன்னுதாரணங்களாக உள்ளன. இருந்தபோதும், முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனவழிப்பே என்று சொல்லி சரியான புள்ளிவிபரங்களுடன் உலகுக்கு முரசறைந்தவர் என்றும் கூறியுள்ளார். (ஐ)

## 'கலைகளின் வளர்ச்சிக்காக வாழ்ந்தவர் மரியசேவியவர்!'

*கொழும்பு, ஏப். 03*

கலைகளின் வளர்ச்சிக்காகவும், கலைஞர்களின் உயர்வுக்காகவும் பல பணிகளை முன்னகர்த்திய பெருமகன் மரியசேவியர் அடிகளார்.

இவ்வாறு கொழும்பு தேஜஸ்வராலயா கலைக்கூடம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மேலும், "திருமறை கலாமன்றத்தின் ஸ்தாபகரும் கலை வாழ்வின் நெறி நின்று தூய வாழ்வு வாழ்ந்தவருமான அருட்தந்தை மரிய சேவியர் பூதவுடல் நீத்து புகழுடலாகிய மறைவு செய்தி கேட்டு வேதனையடைகிறோம்.

கலைகளின் வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல் கலைஞர்களின் உயர்வுக்காகவும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும் பல்வேறு முயற்சிகளையும் பணிகளையும் முன்னகர்த்திய பெருமகன் என்று கூறினால் மிகையாகாது. அமரரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக தேஜஸ்வராலயா கலைக்கூடத்தின் சார்பில் பிரார்த்திக்கிறோம்" என்றுள்ளது. (ஐ)




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu ஈழநாடு
03.04.2021 சனிக்கிழமை
சார்வரி, பங்குனி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மீண்டும் இந்திய எதிர்ப்பும் தமிழர் தரப்பின் மௌனமும்

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆலோசிப்பதாக சில செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், அது எவ்வாறானதொரு முறையில் இடம்பெறப் போகின்றது – என்னும் தீர்மானம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. அதேவேளை, 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ளடங்கியுள்ள காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் சில மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாகவும் ஒரு தகவலுண்டு. ஆனாலும், அதுபற்றியும் இன்னும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் இல்லை. பாராளுமன்ற பெரும்பான்மையில் அவ்வாறானதொரு மாற்றத்தை செய்யமுடியுமா என்னும் கேள்வியையும் சிலர் முன்வைக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் முன்னணி தேரர்கள் அடங்கிய குழுவொன்று, 13ஆவது திருத்தச்சட்டம் நாட்டின் இறைமைக்கு தீங்கை ஏற்படுத்துவதாகவும் – எனவே, புதிய அரசியலமைப்பு வரும்வரையில் தேர்தல்கள் எதனையும் நடத்தவேண்டாமென்றும் கூறியிருக்கின்றனர். இலங்கையின் இறைமையில் இந்தியா தலையீடு செய்துவருவதாகவும், இந்தியாவிற்கு செவிசாய்த்து மாகாண சபை தேர்தலை நடத்தவேண்டிய அவசியமில்லையென்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். குறித்த தேரர்கள் அனைவரும் அரசாங்கத்தின் வெற்றிக்கு பங்களித்தவர்களாவர். அதேவேளை, மனித உரிமைகள் பேரவையில் இந்தியா நடுநிலை வகித்ததையும் குறித்த தோரர்கள் குழு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

மாகாண சபை தேர்தல் விவகாரம் மீளவும் தென்னிலங்கை அரசியலில் சூடான விவாதங்களை தோற்றுவித்திருக்கின்றது. பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தியோ, ஜனாதிபதிக்கு துணிவிருந்தால் மாகாண சபை தேர்தலை எதிர்கொள்ளுமாறு சவால் விடுத்துவருகின்றது. அண்மையில் சஜித் பிரேமதாஸ அவ்வாறான தொனியில் பேசியிருந்தார்.

இந்தியா அண்மையில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கல் தொடர்பில் ஆணித்தரமாக வலியுறுத்தியிருந்தது. அத்துடன், மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்தாது நடத்துமாறும் குறிபபிட்டிருந்தது. இலங்கையின்மீதான புதிய பிரேரணையிலும், மாகாண சபைத் தேர்தல் விவகாரமும் 13ஆவது திருத்தச்சட்டமும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. உண்மையில், 13ஆவது திருத்த சட்ட விவகாரம் பிராந்திய எல்லையை கடந்து, இலங்கை தொடர்பான சர்வதேச கரிசனையாக மாறியிருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் இருக்கின்ற 13ஆவது திருத்தத்தையும் நீக்கினால், புதிய அதிகாரப்பகிர்வு முறையொன்றை நோக்கி அரசாங்கம் பயணிக்கவேண்டும். அது அரசாங்கத்தால் முடியாது. இந்த நிலையில், இருக்கின்ற ஏற்பாட்டுக்குள்ளால் பயணிப்பதுதான் சிறந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், அரசாங்கம் மாகாண சபை தேர்தல் தொடர்பில் சிந்திக்க முற்படுகின்றது. ஆனால், வழமைபோல் மாகாண சபை தேர்தல் என்றவுடன், வழமையான இந்திய எதிர்ப்பும் மேலெழுகின்றது.

ஆனால், இதிலுள்ள கவலைக்குரிய பக்கம், மாகாண சபைக்கு ஆதரவாக உரத்துக் குரல் கொடுக்கவேண்டிய தமிழர் தரப்பினரோ, மௌனமாக இருக்கின்றனர். இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையீடு செய்துவருவதாக தென்னிலங்கையில் குரல்கள் எழுகின்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அமைதி காக்கின்றது. ஆனால், மறுபுறம் யார் முதலமைச்சர் என்றவாறு விவாதம் செய்துகொண்டிருக்கின்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கூறுவது எவ்வாறு இலங்கையின் இறைமையை பாதிப்பதாக அமையும் என்றவாறு கூட்டமைப்பும், விக்னேஸ்வரன் அணியும் கேள்வியை எழுப்பியிருக்கவேண்டும். மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்துமாறு ஜனாதிபதிக்கு கடிதத்தை அனுப்பியிருக்கவேண்டும். "நோகாமல் நொங்கு குடிப்பது" – என்னும் வழக்குச் சொல்லொன்று யாழ்ப்பாணத்தில் இருப்பதாக நினைவு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், தமிழ் அமைப்புக்களின் அரசியல் அணுகுமுறையும் கிட்டத்தட்ட அப்படியான ஒன்றுதான். மாகாண சபைக்காக குரல்கொடுக்க மாட்டார்கள். ஆனால், அதனை மற்றவர்கள் செய்துதந்தால், அதில் முதலமைச்சராக இருப்பதற்கு, அமைச்சராவதற்கு அடிபடுவார்கள்.

# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் இரண்டு ஆண்டுகள்

அலசுவது
**இராஜதந்திரி**



உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு அனர்த்தம் இடம்பெற்று இரு வருடங்களாகி யுள்ளபோதிலும் இன்றுவரை அந்த அனர்த்தத்தில் சம்பந்தப் பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படாத துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது. ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கையும் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், அந்த அறிக்கை குறித்து இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கர்தினால் அதிவண. மல்கம் ரஞ்சித் தமது அதிருப்தியையும் வெளியிட்டிருந்தார்.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு சென் செபஸ்தியன் தேவாலயம், மற்றும் கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களான ஷங்கிரிலா, சினமன் கிராண்ட், கிங்ஸ்பெரி ஆகிய ஹோட்டல்களிலும் ஏககாலத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் இடம்பெற்றவேளை, மட்டக்களப்பில் ஸியோன் தேவாலயத்திலும் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு நிகழ்ந்ததில் 269 பொது மக்களும் எட்டு தற்கொலை குண்டு தாரிகளும் உயிரிழந்தனர்.

மிகத்துல்லியமாக இந்திய புலனாய்வுத் துறையினர் முன்கூட்டியே தமக்கு கிடைத்த தகவல்களை உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பாக இலங்கையின் பாதுகாப்பு துறையினருக்கு வழங்கியிருந்தனர். ஆயினும், இலங்கை பாதுகாப்பு துறையினரின் அலட்சியமே, தலைநகரில் பெரும் மானிட அவலத்தை ஏற்படுத்திய சம்பவமாக உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சம்பவத்தை காண்பித்திருந்தது.

**உதாசீனம்**

இலங்கை பாதுகாப்பு துறையினரின் உதாசீனமான போக்கு ஒருபுறமிருக்க, மறுபுறத்தே இலங்கையின் பாதுகாப்பு நிலபரம் தொடர்பாக அதீத நம்பிக்கை நிலவியதும் குண்டு வெடிப்பு சம்பவங்கள் திட்டமிட்டவாறு இடம்பெற்றமைக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் பலியான அப்பாவி மக்கள் தொடர்பான தகவல்கள் மனதை உலுப்பி விடுவதாகவே அமைந்திருந்தன.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு குறித்த பூர்வாங்க விசாரணைகள் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை என்பவை வெளியிட்ட தகவல்களைப் பார்க்கும்போது, எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கின்றதென்ற கேள்வியே எழுவதாக இருக்கின்றது. பாதுகாப்புத்துறையினர் மற்றும் அதிகாரத்திலிருப்போர் ஆகியோர் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டுகின்ற போக்கே காணப்படுவதுதவிர இருவருடங்களுக்கு முன்னர் நடந்து முடிந்த அக்கோர சம்பவம் குறித்து இதுவரை எவ்வகையிலும் ஆணித்தரமாக எதுவும் வெளிவரவில்லை.

**பொறுப்பற்ற தலைமைகள்**


அண்மையில் முன்னாள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, உரிய முறையில் தமக்கு முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருக்குமேயானால் தம்மால் அந்த அனர்த்தங்களை தவிர்த்திருக்க முடியும் எனக்குறிப்பிட்டிருந்தார். இதேவேளை, அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவும் அக்குண்டு வெடிப்பு இடம்பெற்ற வேளையில் தாம் மருத்துவ சிகிச்சையொன்றுக்காக வெளிநாடொன்றுக்கு சென்றிருந்ததாக குறிப்பிட்டிருந்தார்.

எனவே, பெரும் மனித அவலம் குறித்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துகள், எவ்வளவு தூரம் ஆட்சியதிகாரங்களிலிருப்போர் ஒரு பெரும் மனித அவலம் குறித்து பொறுப்பற்ற முறையில் தமது கருத்துகளை வெளியிட்டுள்ளனர் என்பதை தெளிவாகியுள்ளது.

ஜனாதியாகவிருந்த மைத்திரிபால சிறிசேன, அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதல்கள் குறித்தும்கூட முன்கூட்டியே தகவல்கள் வெளியாகியிருந்ததாகவும், ஆயினும் அமெரிக்காவினாலேயே அத் தாக்குதல்களை தவிர்க்க முடியாதுபோன நிலையில், இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் எம்மாத்திம் என்ற விதத்தில் தமது கருத்தை வெளியிட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் முறியடிக்கப்பட்டு பத்து வருடங்களின் பின்னர் இடம்பெற்றிருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கிய காலகட்டத்தில் உயிர்த்த ஞாயிறு போன்ற ஒரு தாக்குதல் இடம்பெற்றிருக்குமேயானால், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்திவிடக் கூடியதாக இருந்திருக்கும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 03 சனிக்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 21
நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சப்தமி




03.04.2021

**மேடம்**
ஆலய வழிபாட்டில் ஆர்வம் கூடும் நாள். பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வது நல்லது. வியாபார விரோதம் அதிகரிக்கும்.

**இடபம்**
தைரியத்தோடு செயல்பட்டு சாதனை படைப்பீர்கள். நண்பர்கள் தக்கசமயத்தில் கைகொடுத்து உதவுவர். உள்ளம் மகிழும் செய்தியொன்றை உறவினர்கள் வழியில் கேட்கலாம்.

**மிதுனம்**
எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும் நாள். எதிர்காலம் இனிமையாக அமையத் திட்டங்கள் தீட்டுவீர்கள். அரசு வழிச் சலுகை எதிர்பார்த்தபடியே கிடைக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்**
சுபச்செலவுகள் ஏற்படும் நாள். சுற்றியிருப்பவர்களால் ஒருசில தொல்லைகள் அதிகரிக்கும். அரசியல் ஈடுபாடு அனுகூலம் தரும். அக்கம் பக்கத்து வீட்டாரிடம் அளவோடு பழகுவது நல்லது.

**சிம்மம்**
எதிர்பார்த்த தொகை எளிதில் கிடைக்கும் நாள். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். பண விவகாரங்களில் நாணயத்தைக் காப்பாற்றுவீர்கள்

**கன்னி**
தொட்ட காரியம் துளிர்விடும் நாள். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். பூர்வீக சொத்துகளால் ஏற்பட்ட பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும்.

**துலாம்**
வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்ளும் நாள். தடைப்பட்ட ஒப்பந்தங்கள் தானாக வந்து சேரும். வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு.

**விருட்சிகம்**
பயணத்தால் பலன் கிடைக்கும் நாள். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். எந்த முக்கிய முடிவும் குடும்ப உறுப்பினர்களிடம் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதே நல்லது.

**தனுசு**
யோகமான நாள். உள்ளம் மகிழும் தகவல் இல்லம் தேடி வரும் நாள். உடல்நலம் சீராகும். வருமானம் திருப்தி தரும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு உண்டு.

**மகரம்**
ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். தொழிலில் இருந்த மறைமுகப் போட்டிகளை முறியடிப்பீர்கள். சமூகநலப் பணிகளில் நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்**
புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும் நாள். பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவிற்கு வரும்.

**மீனம்**
நட்பால் நன்மை கிடைக்கும் நாள். நாடு மாற்றம், வீடு மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

# ஜல்லிக்கட்டை கொண்டு வந்தது பா.ஜ.க.அரசுதான்

## மதுரை கூட்டத்தில் பிரதமர் விளக்கம்

மதுரை,ஏப்.03

**ஜல்லிக்கட்டை கொண்டு வந்தது பா.ஜ.க. அரசுதான் என்றும், கலாசார விளையாட்டுக்கு தடையாக இருந்தது காங்., தி.மு.க. தான் என்றும் மதுரையில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் பிரதமர் மோடி விளக்கினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மண் மீனாட்சி அம்மன் ஆலயம் அருள் புரியும் மண். நேற்று, மீனாட்சி அம்மனை சுந்தரேஸ்வரரையும் வணங்கி தரிசனம் செய்தேன். இனிவரும் நாட்களில் இந்த ஆன்மிக நிகழ்வை அடிக்கடி எண்ணி பார்ப்பேன்.

மதுரை மண், அழகர் பெருமாள் வீற்றிருக்கும் மண். கூடலழகர் வீற்றிருக்கும் மண். திருப்பரங்குன்றம் முருகன் வீற்றிருக்கும் மண். தமிழ்பண்பாட்டின் தொட்டிலாக மதுரை திகழ்கிறது. மகாத்மா காந்தியிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய மண். தமிழுக்கும் மதுரைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மதுரை என்றால், தமிழ் சங்கம் இருப்பது நினைவுக்கு வருகிறது. அதனால், தமிழ் இலக்கியம், பண்பாட்டையும் பாதுகாக்கிறவர் களை பாராட்டி வணங்குகிறேன்.

இந்த பிராந்திய மக்கள் வலிமையான பலமும் பரந்த மனமும் கொண்டவர்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு குஜராத்தின் சவுராஷ்டிராவில் இருந்து இங்கு வந்து வசிக்கின்றனர். தெலுங்கு பேசும் மக்கள் பல ஆண்டுகளாக இங்கு உள்ளனர். மதுரை நினைக்கும் போது ஒரே நாடு பெருமைமிகு நாடு என்பதன் வெளிப்பாடாக நான் பார்க்கிறேன்.

தென் தமிழகத்திற்கு எம்.ஜி.ஆருடன் நெருங்கிய தொடர்பு உள்ளது. மதுரை வீரன் படத்தை யாராவது மறக்க முடியுமா. திரைப்படங்களில், எம்.ஜி.ஆருக்கு குரல் கொடுத்தவர்களில் டி.எம்.சவுந்திரராஜன் குரலை மறக்க முடியுமா. ஆனால், மத்திய காங் அரசு, எம்.ஜி.ஆர். அரசை கலைத்தது. மீண்டும் தேர்தல் நடந்தபோது மதுரை மேற்கு தொகுதியில் இருந்து எம்ஜிஆர் வெற்றி பெற்றார். அவர் பின்னால், பாறை போன்று மக்கள் கடுமையாக நின்றார்கள். எம்.ஜி.ஆர்., தென் தமிழகத்தில் இருந்து 3 முறை வெற்றி பெற்றார். அவரின் சமுதாயத்திற்கான நோக்கம், நமக்கு தொடர்ந்து ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கும்-என்றார்.

# தமிழர்களின் அடையாளம், நாகரிகம், பண்பாட்டை அழிக்க பா.ஜ.க அரசு மிகுந்த தீவிரம் காட்டுகிறது!

## காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி விமர்சனம்

சென்னை, ஏப். 03

தமிழர்களின் அடையாளம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அழிப்பதற்காக மத்திய பாஜக அரசு மிகுந்த தீவிரம் காட்டி வருகிறது என, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக, கே.எஸ். அழகிரி வெளியிட்ட அறிக்கையில்-

'தமிழகத்தில் தேர்தல் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் ஆகியோர், மத்திய பாஜக அரசின் மூலம் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைக் கூறி வாக்கு கேட்காமல், திமுக, காங்கிரஸ் கட்சிகள் மீது கடுமையான விமர்சனங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

உலகில் தொன்மையான மொழி தமிழ் மொழி என்று கூறி திருவள்ளுவர், பாரதியார், ஔவையார் ஆகியோரை மேற்கோள் காட்டுகிறார் பிரதமர் மோடி. நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கை, மத்திய பணியாளர் தேர்வுகளில் இந்தித் திணிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து செய்து வருகிற மத்திய பாஜக அரசு, தமிழ் மொழிக்காக பாரபட்சமாக நடந்து கொண்டதற்கு நிறைய சான்றுகளைக் கூறலாம்.

தமிழர்களின் அடையாளம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அழிப்பதற்காக மத்திய பாஜக அரசு மிகுந்த தீவிரம் காட்டி வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இருக்கிறது. நாம் எதை வேண்டுமானாலும் இழக்கலாம். ஆனால், 3 ஆயிரம் ஆண்டுகால வரலாற்றுப் பெருமை கொண்ட பண்பாடு, நாகரிக அடையாளத்தை எந்த நிலையிலும் இழக்க முடியாது.

இதை அழிப்பதற்கு பாஜக, அதிமுக உள்ளிட்ட கட்சிகள் இந்தத் தேர்தலில் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதை முறியடிப்பதுதான் தமிழர்களின் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். அதன்மூலமே தமிழக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்".என்றுள்ளது.

# நான்தான் முதல்வர்

## காரைக்காலில் ரங்கசாமி பேச்சு

சென்னை, ஏப். 03

கூட்டணியில் அதிக தொகுதிகளைப் பெற்றிருக்கும் நான்தான் முதல்வர். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம் என என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் என். ரங்கசாமி கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில், காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு (தனி) சட்டப்பேரவைத் தொகுதியில் என்.ஆர்.காங்கிரஸ் சார்பில் போட்டியிடும், தற்போதைய சட்டப்பேரவை உறுப்பினரான சந்திரபிரியங்காவுக்கு வாக்குகள் கோரி, பூவம், வரிச்சிக்குடி உள்ளிட்ட பலவேறு பகுதிகளில் நேற்றுரங்கசாமி பிரசாரம் மேற்கொண்டார்.அப்போது அவர் பேசியதாவது:

''கடந்த 5 ஆண்டு கால காங்கிரஸ்-திமுக கூட்டணி ஆட்சியில், புதுச்சேரி 15 ஆண்டு காலம் பின்னோக்கிச் சென்றுவிட்டது. 5 ஆண்டுகளில் 10 பேருக்கு கூட வேலை வாய்ப்புகளை வழங்கவில்லை. ஆனால், எத்தனை பேர் வேலை இழந்துள்ளனர் என்றுதான் கணக்கெடுக்க வேண்டியிருக்கிறது. பள்ளி மாணவர்களுக்கான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. முதியோர் உதவித் தொகை உயர்த்தப்படவில்லை. எந்தவொரு பிரிவு மக்களுக்கான நலத்திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை.

புதுச்சேரியில் அனைத்து மக்களின் நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று புதிய நல்லாட்சியைக் கொண்டு வர வேண்டும். அதற்கு என்.ஆர்.காங்கிரஸ், பாஜக, அ.தி.மு.க., பாமக உள்ளிட்ட கூட்டணியை ஆதரிக்க வேண்டும்.

முதல்வராக இவர் வருவாரா என்று சிலர் கேட்கலாம். கூட்டணியில் அதிக தொகுதிகளைப் பெற்று போட்டியிடுவது என்.ஆர்.காங்கிரஸ்தான். அதனால் நிச்சயமாக முதல்வராக நான்தான் இருப்பேன். அதில் சந்தேகமே வேண்டாம்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு எம்.பிக்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம்

## மஹிந்தானந்த குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, ஏப். 03

**வடக்கு - கிழக்கு மக்கள் எமது ஜனாதிபதியை நம்புகின்றார்கள். அதனால் அரசாங்கத்தை நம்பி எமது கட்சியூடாகவும், கட்சிக்கு ஆதரவாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களை அனுப்பியுள்ளனர். என விவசாய அமைச்சர் மஹிந்தானந்தா அளுத்கமகே தெரிவித்தார்.**

வடக்கு-கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் பிரச்னைகளை பேசாது வேறு பிரச்னைகளை பேசுவதால் வெளிநாடுகளில் இருந்து பணம் வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கக்கரி செய்கை விவசாயிகள் சந்திப்பும், உதவி வழங்கும் நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை மாங்கேணியில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு செல்வதாக ஜனாதிபதியுடன் பேசியபோது மக்களின் பிரச்னை கேட்டறிந்து என்னிடம் சொல்லுங்கள் என்றார். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து பாராளுமன்றத்திற்கு வேறு கட்சிகளில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்துள்ளனர். அவர்கள் உங்களுடைய பிரச்னைகளை பற்றி பேசுவது கிடையாது. அவர்களுடைய வியாபாரத்தை மாத்திரம் பேசுகின்றனர்.

இவர்கள் மக்களின் பிரச்னைகளை பேசாது வேறு பிரச்னைகளை பேசுவதால் வெளிநாடுகளில் இருந்து பணம் வருகின்றது. நீங்கள் கஷ்டமாக இருந்தால் மாத்திரம் அவர்களுக்கு சந்தோசம். உங்களுக்கு உதவி கிடைத்தால் அவர்களுக்கு பிரச்னை.

ஜனாதிபதி கோட்டாபய வந்தபோது எல்லாரும் சொல்லியது தமிழ் மக்களின் கதை முடிந்தது என்று. ஆனால் அவர் வந்து ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளன. ஜனாதிபதி வந்ததன் பிற்பாடுதான் உங்களுக்கு பல்வேறு உதவிகள் கிடைத்துள்ளன- என்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.சந்தரகாந்தன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திருமதி.கலாமதி பத்மராஜா, விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஆர். ஆர்.ஏ.குகான் விஜயகோன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் உட்பட திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இன்று வடக்கு வருகிறார் ஜனாதிபதி கோட்டாபய!

## வவுனியாவில் விஷேட ஏற்பாடுகள்

வவுனியா, ஏப்.03

ஜனாதிபதியின் வவுனியா வருகையை முன்னிட்டு கலாபோகஸ்வேவ பகுதியில் பல்வேறு விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வடக்கு மாகாணத்துக்கான முதல் விஜயமாக வவுனியா கலாபோகஸ்வேவ பகுதிக்கு இன்று விஜயம் செய்யவுள்ளார்.

கிராமத்துடன் உரையாடல் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் கலாபோகஸ்வேவ பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் குறைநிறைகள் தொடர்பில் கேட்டறியவுள்ளதுடன், பல்வேறு கிராமிய அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு கலாபோகஸ்வேவ பாடசாலை முழுமையாக சிரமதானம் செய்யப்பட்டு பிரமாண்டமான கொட்டகை அமைக்கப்பட்டு அப்பகுதி வீதிகளும் அவசர அவசரமாக செப்பனிடப்பட்டுள்ளன.

மாவட்ட அரச அதிபர், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மின்சார சபையினர், சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரும் விடு முறையையும் பொருட்படுத்தாது நிகழ்வுக்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டனர். (எ)

# ஜோசப் ஆண்டகை பெயரில் புதிய சதுக்கம் வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை

வவுனியா, ஏப். 03

தமிழர் தாயகத்தில் ஒரு புனிதமான சதுக்கம் உருவாக்கி பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பெயரிடப்பட வேண்டும் என வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த 1505 நாட்களாக சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் போனவர்களின் உறவினர்களால் உயிரிழந்த பேராயர் இராயப்பு ஜோசப்பிற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

# ஆட்சியாளர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கியவரே ஆயர் இராயப்பு ஜோசப்!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 03

இலங்கையில் எந்த ஆட்சியாளர்களாக இருந்தாலும் அவர்களுக்கு சிம்மசொப்பனமாக, மறைந்த மன்னார் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் திகழ்ந்தார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வன்னி பெருநிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக போர்ச் சூழலிலும், போர் ஓய்ந்த பின்னரும் அயராது பாடுபட்டிருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அன்னாரின் மறைவையொட்டி முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் கிறிஸ்தவ மக்களுக்காக மட்டுமல்லாது இந்து, முஸ்லிம், பௌத்த மக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்க்கை தொடர்பாக ஆயருக்கு அக்கறை இருந்தது எனவும் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

மேலும், தான் அமைச்சராகப் பதவி வகித்த காலம் உட்பட பல சந்தர்ப்பங்களில் ஆயர் இராயப்பு ஜோசப்புடன் பேசும் வாய்ப்புக் கிடைத்ததாகக் குறிப்பிட்டுள்ள ஹக்கீம், மக்களுக்காக ஆயர் முன்வைத்த கோரிக்கைகளை நினைவு கூருவதாகத் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ் மொழிக்கு அப்பால் ஆயரின் ஆங்கில மொழிப் புலமைகண்டு வியந்துள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

காணாமல் போனவர்களின் நெருங்கிய உறவினர்கள் அனுபவிக்கும் துன்ப, துயரங்களைத் தாமும் அனுபவிப்பதாகத் தன்னிடம் ஆயர் கூறியதாகவும் ஹக்கீம் கூறினார்.

இந்நிலையில், ஓய்வு நிலை ஆயரின் மறைவிற்கு தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பல்கலைக்கழகமாகும் வவுனியா வளாகம்!

கொழும்பு, ஏப். 03

நீண்ட இழுபறியின் பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினை தனியான பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

வளாகத்தை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான தீர்மானத்தினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற் கொண்டுள்ளதாகவும் இது தொடர்பிலான அறிவித்தல் இந்த மாதம் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய பல்கலைக்கழகத்தில் தற்போது உள்ள பீடங்களுக்கு மேலதிகமாக புதிதாக இரண்டு பீடங்களை அமைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆட்சிக்காலங்களின் போது ஒவ்வொரு கல்வி அமைச்சரும் இது குறித்த அறிவித்தல்களை விரைவில் வெளியிடவுள்ளதாக தெரிவித்துவந்திருந்தமை தெரிந்ததே.

# இராகலை பகுதியில் நீரில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப்.03

இராகலையில் பகுதியில் நீராடச்சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராகலை - கொரண்டிக் குளத்தில் நேற்று பிற்பகல் நீராடச்சென்ற நிலையில் குறித்த மாணவன் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவனை தேடும் பணிகளை பிரதேச மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில், காணாமல் போயிருந்த மாணவன் சடலமாக மீட்கப்பட்டார்.

இராகலை சூரியகந்தை பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய மாணவன் ஒருவனே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸார் மனிதாபிமானத்துடன் மக்களிடம் நடந்துகொள்ளவேண்டும்

## துமிந்த திசாநயக்க கோரிக்கை



கொழும்பு, ஏப். 03

சட்டத்தை மீறுபர்களை கைது செய்து அபராதம் விதிப்பது பொலிஸாரின் ஒரே கடமை அல்ல என இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், மக்களுடன் பழகும் போது பொலிஸார் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பல்வேறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டர்களை புனர்வாழ்வு அளிப்பதோடு, குற்றங்களைத் தடுப்பதற்கான முயற்சிகளை தொடரவும் அவர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் எண்ணெய் இறக்குமதிக்கு புதிய வர்த்தமானி பாம் எண்ணெய் இறக்குமதி நோக்கமல்ல - அரசாங்கம்

**கொழும்பு, ஏப்.03**

**தேங்காய் எண்ணெய் இறக்குமதி தொடர்பில் 2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டு பாதுகாப்பான தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி வெளியிடப்படும்.**

**இதன்மூலம், பாம் எண்ணெய் இறக்குமதியை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல என வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

சர்ச்கைக்குரிய தேங்காய் எண்ணெய் விவகாரம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயன பதார்த்தம் கலக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்பது பல்வேறு பரிசோதனைகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

பிரதான மூன்று தனியார் நிறுவனங்கள் இறக்குமதி செய்த தேங்காய் எண்ணெயில் இரசாயன பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளன என்பதை அரசாங்கமே வெளிப்படுத்தியது. இவ்விடயத்தில் இரகசிய தன்மையினை பேண வேண்டிய தேவை ஏதும் கிடையாது.

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை சுங்க திணைக்களம் மேற்கொண்டுள்ளது. தேங்கய் எண்ணெய் இறக்குமதி தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் 2016 ஆம் திகதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வித கலப்படமும் இல்லாத பாதுகாப்பான தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய புதிய வர்த்தமானி வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாம் எண்ணெய் பாவனையை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. இந்த எண்ணெய் தயாரிப்பு சுற்றாடலுக்கும், மனித உடல் ஆரோக்கியத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

வெவ்வேறு தேவைகளுக்கான பாம் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகின்றது. இறக்குமதியை மட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக அதற்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தை காட்டிலும் தற்போது பாம் எண்ணெய் இறக்குமதி பெருமளவில் குறைவடைந்துள்ளது என்றார்.

(எ)

# 1000ரூபா கிடைக்காவிடின் அடுத்து என்ன செய்வது?

## ஜீவன் விடுத்துள்ள விசேட அறிவிப்பு

கொழும்பு, ஏப். 03

"பயத்தால் அல்ல, நீதிமன்ற தீர்ப்பு வரும் வரையே நாம் பொறுமை காக்கின்றோம். நீதிமன்ற தீர்ப்பு தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் அமையும் என நம்புகின்றோம். எது எப்படி இருந்தாலும் ஆயிரம் ரூபாவை எப்படி பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது எமக்கு தெரியும்." - என்று இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் அமைந்துள்ள சீல்.எல்.எப் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் குறைநிறைகளை கண்டவறிதற்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு நடைபெற்ற பின்னர் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு மற்றும் கம்பனிகளின் செயற்பாடுகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் ஜீவன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"50 ரூபா, 100 ரூபா என கூறிக்கொண்டு கடந்த ஆட்சியின்போது 5 வருடங்கள் கடத்தப்பட்டன. அதற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்படவில்லை. ஆனால் இன்று கம்பனிகளுக்கு எதிராக நாம் நீதிமன்றம்வரை சென்றுள்ளோம்.

இந்நிலையில் தொழிலாளர்களை உசுப்பேத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அரசாங்கத்திடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது, அப்படி இருக்கையில் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றியாவது ஏன் சம்பள உயர்வை வழங்க முடியாது எனவும் கேட்கின்றனர். எடுத்த எடுப்பிலேயே எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. அதற்கென நடைமுறைகள் உள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாகத்தான் சம்பள நிர்ணய சபை ஊடாக தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கு எதிராக மேன்முறையிடு செய்யும் உரிமையும், நீதிமன்றம் செல்லும் உரிமைகளும் கம்பனிகளுக்கு இருக்கின்றன. ஆனால் 5 ஆம் திகதி நல்ல முடிவு வரும் என நம்புகின்றோம்.

தொழிற்சங்க ரீதியில் தொழிலாளர்களின் பல பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளோம். பெற்றுக்கொடுத்தும் வருகின்றோம். மற்றைய தரப்பினரும் தொழிற்சங்கம் நடத்துகின்றனர். அவர்கள் விமர்சனங்களை முன்வைப்பதையே பணியாக முன்னெடுக்கின்றனர். நாம் பொறுமையாக இருக்கின்றோம். அதற்கு பயம் காரணம் அல்ல. நீதிமன்ற தீர்ப்புவரும் வரை காத்திருக்கின்றோம்.

சிலவேளை நீதிமன்ற தீர்ப்பு தொழிலாளர்களுக்கு சாதகமாக அமையாவிட்டால், அடுத்து என்ன செய்வது என்பதும் தெரியும். பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படும். இது தொடர்பில் தொழில் அமைச்சர் ஏற்கனவே அறிவித்துள்ளார்." - என்றார்.

# விபத்தில் சிக்கிய இரு இளைஞர்கள் பலி!

பன்னிப்பிட்டி,ஏப்.03

பன்னிப்பிட்டி, பொல்வத்த சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது.

தலவத்துகொடையிலிருந்து வந்த வாகனமொன்று பொல்கொடுவ வீதிக்குத் திரும்ப முற்பட்ட போது பன்னிப்பிட்டி பகுதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் மற்றைய நபர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

(எ)

# மரண அறிவித்தல்

பிறப்பு
01
-
05
-
1937



இறப்பு
01
-
04
-
2021

## செல்லையா இராசலிங்கம்

**(நாகையா)**

யாழ். வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டை முதலாம் யூனிற்றை வதிவிடமாகவும், பிரான்ஸ் Évry ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசலிங்கம் நேற்றுமுன் தினம் (01.04.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற செல்லையா – தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வராசா – முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், பதிவிரதாசிரோன்மணி ( இராசத்தி ) அவர்களின் அன்புக் கணவரும், பகீரதி ( சசி எவ்றி தமிழ்ச்சோலை ஆசிரியை ), சாந்தரூபி( சுதா ), சாந்தினி( உஷா ), நவசீலன் ( ராசன் ), தவச்செல்வன் ( குட்டித்தம்பி ) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நவரட்னம்மா, நகாரத்தினம், பாக்கியம், யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், விவேகானந்தராசா ( ஆனந்தன் ), சத்தியகுமார் ( ராசன் ), சண்முகனாந்தவேல் (அப்பு), சுகிர்தா, தர்சினி (சுரேகா) ஆகியோரின் மாமானாரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, வைத்திலிங்கம், சபாரட்ணம் மற்றும் சௌவுந்தரம் மற்றும் பராசக்தி, காலஞ்சென்றவர்களான நவரட்ணசிங்கம், நித்தியலட்சுமி, மற்றும் மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம்(பூபாலசிங்கம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்ற காசிலிங்கம், மற்றும் மனோன்மணி, கந்தசாமி, காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் சகலனும், விவேசன், கபிலன், அபிரா, சனோஜன், அங்கீரா, அட்சயன், அட்சிகா, அபிசிகா, அங்கவி, அருசன், அகானா, ஆரணா, அதிகன், ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

தொடர்புகளுக்கு:
**சீலன் - மகன்**
+33646640859

தகவல்:
**குடும்பத்தினர்**

# "ஊவா தமிழ்க் கல்வி அமைச்சு பறிப்பு" அரச பங்காளியான இ.தொ.கா. எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 03

ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு, ஊவா மாகாண சபையிலிருந்து பறிபோனதானது ஜீரணிக்க முடியாததொன்றாகும். இத்தமிழ்க் கல்வி அமைச்சு நீக்கப்பட்டமை, ஊவா மாகாண தமிழ் மக்களுக்கும், தமிழ் கல்விச் சமூகத்திற்கும் பெரும் பாதிப்பேயாகுமென்று, இ.தொ.கா. உதவிச் செயலாளரும், முன்னால் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டி.வி. சென்னன் தெரிவித்தார்.

முன்னாள் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சென்னன் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில்,

ஊவா மாகாணத்தின் தமிழ்க்கல்வி அமைச்சை இல்லாமல் செய்ய வேண்டுமென்று மாற்று சமூகத் தலைமைகள், பலவகையில் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு, கங்கனம் கட்டிச் செயற்பட்டு வந்தனர். ஆனால், அச் செயற்பாடுகள் அனைத்தையும், அக்காலப்பகுதியில் தமிழ்க்கல்வி அமைச்சராக இருந்த செந்தில் தொண்டமான் முறியடித்து, தமிழ்க்கல்வி அமைச்சை வெற்றிகரமாக முன்னெடுத்து வந்தார்.

ஆனால், தற்போது, ஊவா மாகாண ஆளுனர் ஏ.ஜே.எம். முஸம்மில், 02-04-2021 முதல், ஊவா மாகாணத்தில் தமிழ்க்கல்வி அமைச்சை, விசேட வர்த்தமானி ஒன்றின் மூலம் இல்லாமல் செய்துவிட்டார். இச் செயற்பாடானது மாகாண தமிழ் மக்களுக்கும், கல்விசார் சமூகத்தினருக்கும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகின்றது.

இவ் விசேட வர்த்தமானி அறிவிப்பிற்கு முன், ஊவா மாகாண ஆளுனர் ஏ.ஜே.எம். முஸம்மில் எமது சமூக முக்கியஸ்தர்கள் மற்றும் தமிழ்க்கல்வி சார் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடலொன்றினை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், இவ் வகையில் எந்தவொரு கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளாமல், தன்னிச்சையாக முடிவெடுத்து, தமிழ்க்கல்வி அமைச்சை நீக்கியதானது, தமிழ் மக்களின் மனதினை புண்படுத்திய செயலாகும் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ச் சூழலில் மக்களின் துயரங்களை துடைக்க அரும்பாடுபட்டவர் ஆண்டகை!

## பிரதமர் மஹிந்த அனுதாபச் செய்தி



கொழும்பு, ஏப்ரல் 03

'மடு அன்னை தேவாலயத்தை பாதுகாப்பதற்கான இராயப்பு ஜோசப் ஆண்டகையின் அர்ப்பணிப்பை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்கவும், ஏழை மக்களுக்கு உதவவும் அவர் அரும்பாடுபட்டார்" என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தனது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

'மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவு குறித்த செய்தி அறிந்து மிகுந்த மன வேதனையடைந்தேன்.

1940ஆம் ஆண்டு ஏப்ரல் 16ம் திகதி யாழ். மாவட்டத்தின் நெடுந்தீவில் பிறந்த இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை, முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தார்.

இத்தாலியில் உள்ள பரப்புரைக் கல்லூரியில் திருமறைச் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்ற இராயப்பு ஜோசப் ஆண்டகை, 1967 இல் குருவானவராக தனது பணியை ஆரம்பித்தார்.

1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டு, 1992 ஒக்டோபரில் திருநிலைப்படுத்தப்பட்டார்.

மனிதாபிமான நடவடிக்கையின்போது நாட்டில் அமைதியைக் ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகவிருந்தது.

அந்தவகையில் போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்து நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்கவும், ஏழை மக்களுக்கு உதவவும் அவர் அரும்பாடுபட்டார்.

மடு அன்னை தேவாலயத்தை பாதுகாப்பதற்கான இராயப்பு ஜோசப் ஆண்டகையின் அர்ப்பணிப்பை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இழப்பால் துயருறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

# சீனாவின் ஜனநாயக விரோத அரசியலை இலங்கைக்கும் கொண்டுவர திட்டமா?

## சந்தேகம் உள்ளது என சிவில் அமைப்புகள் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.03

**சீனாவின் அரசியல் முறைமையை ஆராய்வது தொடர்பில் கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளதான விடயத்தை அறிந்து கொள்ள கூடியதாகவிருந்தது. இது பாரதூரமான விடயமாகும். சீனாவில் ஜனநாயக விரோத அரசியல் முறைமை காணப்படுகிறது.**




இவ்வாறு ஐக்கிய பிரஜைகள் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

'அண்மையில் சீன ஜனாதிபதிக்கும் எமது நாட்டின் ஜனாதிபதிக்கும் இடையில் தொலைபேசி கலந்துரையாடல் இடம் பெற்றது. அந்த கலந்துரையாடல் தொடர்பான விடயம் உள்நாட்டு ஊடகங்கள் சிலவற்றில் மேலோட்டமாக வெளியிடப்பட்டன. அந்த வகையில் உள்நாட்டு ஊடகங்களில் வெளியிடப்பட்ட தகவல்களுக்கும், சீன ஊடகங்களில் இது தொடர்பில் வெளியிடப்பட்ட தகவல்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது.

சீனாவின் அரசியல் முறைமையை ஆராய்வது தொடர்பில் கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளதான விடயத்தை அறிந்து கொள்ள கூடியதாகவிருந்தது. இது பாரதூரமான விடயமாகும். இலங்கையில் ஜனநாயக அரசியல் முறைமையொன்று உள்ளது. டொனமூர் அரசியலமைப்பிலிருந்து எமது நாட்டினுடைய அரசியல் முறைமை ஜனநாயக ரீதியில் மக்கள் விருப்புக்கு அமைய அமைந்துள்ளது. மக்களும் நாட்டினுடைய அரசியல்முறைமையை ஏற்றுக்கொண் டுள்ளனர். அதே போன்று ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் அரசியலுடன் தொடர்புபடுகின்றனர். அதன் ஊடாகவே எமது அரசியல் முறைமை ஜனநாயக அரசியல் முறைமையாகவுள்ளது.

சுதந்திரத்திற்கு பின்னரான ஆட்சி முறைமைகளில் 10 வருடங்களுக்கு மேல் ஒரே நபரை ஆட்சியில் இருக்க மக்கள் அனுமதிப்பதில்லை. ஆட்சி மாற்றத்தை மக்கள் செய்கின்றனர். தேர்தல் முறைமை யில் மக்கள் தொடர்புபடுகின்றனர். ஜே.ஆர் .ஜெயவர்த்தன கொண்டுவந்த அரசியலமைப்பின் ஊடாகவே நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை உருவானது. அதன் ஊடாகவே சர்வாதிகார விம்பம் தொற்றம் பெற்றது. அதன் காரணமாகவே , 10 வருடங்களுக்கும் மேலாக ஆட்சியமைக்கும் நிலைமை எதிர்தரப்பினரை அச்சுறுத்தும் நிலைமை என்பன உருவானது.

இந்நிலையில் சீனாவிடம் கற்றுக்கொள்ள வேண்டியதென்ன? சீனாவில் ஜனநாயக விரோத அரசியல் முறைமையே காணப்படுகின்றது. இந்நிலையில் அவர்களுடைய அரசியல் தொடர்பில் எமக்கு கற்றுக் கொள்ள என்னவுள்ளது?"

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மின்சாரசபை ஊழியர் உயிரிழப்பு

## கொலையை மறைக்க சக ஊழியர்கள் நாடகம்
## பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் கைதாகினர்

அம்பலாங்கொடை, ஏப்.03

அம்பலாங்கொடை பிரதேசத்தில் மின்சாரசபை ஊழியரொருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரி உட்பட இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஹூங்குரகஸ்மங்சந்தி - வள்ளிகுருகெட்டி பிரதேசத்தில் மின்சாரசபை ஊழியரொருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் என சக ஊழியர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் அம்பலாங்கொடை - சீனிகொடை கிளையில் பணிபுரியும் 6 ஊழியர்கள் வேலை நிமித்தம் ஹூங்குரகஸ்மங்சந்தி - வள்ளிகுருகெட்டி பிரதேசத்திற்கு சென்ற போது நபரொருவரால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதன் போது 27 வயது குமார பிரிய தர்ஷன என்பவர் உயிரிழந்ததாகவும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. உயிரிழந்த நபருடனிருந்த சக ஊழியர்களால் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஹூங்குரகஸ் மங்சந்தி பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த நபர்களால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிரதேசத்தில் பொலிஸார் கண்காணிப்புக்களில் ஈடுபட்ட போது, அப்பிரதேசத்தில் அவ்வாறு துப்பாக்கிப்பிரயோகம் இடம்பெறவில்லை என்பது தெரியவந்துள்ளது. இதற்கமைய முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் மூலம் அம்பலாங்கொடை நகரத்தை அண்மித்த பகுதியொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த 6 பேரில் 37 வயதுடைய ஊழியர் ஒருவரது வீட்டிற்கு இவர்கள் அனைவரும் சென்றுள்ளனர். இதன் போது வீட்டினுள் இடம்பெற்ற சம்பவத்தில் குறித்த நபர் உயிரிழந்தார். இதனை மறைப்பதற்காக ஹூங்குரகஸ்மங்சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக ஏனையோர் பொலிஸ் நிலையத்தில் போலியாக முறைப்பாடளித்துள்ளனர். இவர்கள் அனைவரும் சென்ற குறித்த வீட்டின் உரிமையாளரான 37 வயதுடைய மின்சாரசபை ஊழியரே தன்னுடன் வந்த சக ஊழியர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியமை மேலதிக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் அம்பலாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு இவர் ரிவோர்வரொன்றையே பயன்படுத்தியுள்ளமையும், மீட்டியாகொட பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே அதனை வழங்கியுள்ளமையும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இதற்கமைய குறித்த பொலிஸ் கான்ஸ்பிபள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவரால் வழங்கப்பட்ட ரிவோல்வரும் கைப்பற்றப்பட்டுள்ளது. அம்பலாங்கொடை பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்- என்றார்.

இவ்வாறான மனித கொலை இடம்பெற்ற பின்னர் பொய்யாக முறைப்பாடளித்தமை, கொலையை மறைக்க முற்பட்டமை மற்றும் கொலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (எ)

# மாகாண சபைகக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும்!

## பொது ஜன பெரமுன முன்னாள் உறுப்பினர் வலியுறுத்து

கொழும்பு, ஏப்., 03

மாகாண சபைத் தேர்தலை மிகவிரைவில் நடத்துவதே மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துமென மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் திலக் பண்டார தெரித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெறமுண தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியல்லர் சாந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'அன்று நல்லாட்சியினால் ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்களிடையே மாகாண சபையும் தீர்க்கமான விடயமாக அமைந்தது. தொடர்ச்சியாக மாகாண சபைத் தேர்தல் அவசியமாகின்ற விடயங்களை சமூகத்திற்கு இடித்துரைத்து வருகின்றோம். மூன்று வருடங்களுக்கும் அதிகமாக மாகாண சபைகள் கலைக்கப்பட்டு மக்களுக்கான சேவைகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் காலகட்டத்தில் நாங்கள் சுட்டிக்காட்டுகின்றோம். ஆகவே எந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் ஜனாதிபதி, பிரதமர், கட்சி தேசிய அமைப்பாளரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்,

லக்கல தொகுதி உட்பட மாத்தளை மாவட்டத்தில் மத்திய அரசின் நிர்வாகத்தில் எந்த வைத்தியசாலைகளும் இல்லை. அனைத்தும் மாகாண சபைகளுக்குரியது. ஏ-9வீதி தவிர்ந்த அனைத்து வீதிகளும் மாகாண சபைகளுக்கு உரித்தாகும். பாடசாலைகளில் ஓரிரண்டு பாடசாலைகளே மத்திய அரசாங்கத்திற்கு உரியதாகும். ஏனைய அனைத்து பாடசாலைகளும் மாகாண சபைக்கு கீழ் உள்ளன.

மக்கள் பிரதிநிதிகளாக செயல்பட்டு நலன்புரி, அபிவிருத்திக்கு மக்களுக்கு வழங்க மாகாண சபை இடைப்பட்டது. இன்று சபை கலைக்கப்பட்டுள்ளதால் மக்களுக்கான சேவை இழக்கப்பட்டுள்ள நிலையில் மக்களுக்கான அரசாங்கம் உள்ளதால் நல்லாட்சியினால் ஒத்திவைக்கப்பட்டுள்ள தேர்தலை விரைவில் நடத்தி மீண்டும் மக்களுக்கான சேவையை தொடர்வதற்கு வழியமைக்கும்படி கோருகின்றோம் " எனவும் அவர் தெரி வித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021

# “ரெய்டில் பிடிபட்ட மொத்த பணமே 5 சதவிகிதம்தான்”

## அதிர வைக்கும் தகவல்கள்

**ஆ. விஜயானந்த்**
பிபிசி தமிழுக்காக



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 6 ஆம் திகதி நடக்க உள்ளது. தேர்தல் பிரசாரம் நிறைவடைய இன்னும் 2 நாள்களே இருப்பதால் தி.மு.கவும் அ.தி.மு.கவும் தொடர்ந்து மக்களைச் சந்தித்து வாக்குகளைக் கேட்டு வருகின்றன.

இதுதவிர, அ.ம.மு.க, மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர் கட்சி ஆகியவற்றின் தலைவர்களும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். இதில், அரசியல் கட்சித் தலைவர்களின் பிரசாரத்தையும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களையும் தேர்தல் ஆணையம் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

**குரல் பதிவு கொடுத்த தலைவலி**

இதன் ஒரு பகுதியாக, அண்மையில் திருவண்ணாமலை தி.மு.க மாவட்டச் செயலாளர் எ.வ.வேலுவின் வீடு, மக்கள் நீதி மய்யத்தின் ஆதரவாளர் ஒருவரின் வீடு, நிதி நிறுவனங்கள் என வருமான வரித்துறையின் சோதனை அரங்கேறியது.

இது தி.மு.க தரப்பில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இது தொடர்பாக பேட்டியளித்த தி.மு.க செய்தித் தொடர்பு செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன், “தி.மு.கவின் வெற்றியைத் தடுப்பதற்காக வருமான வரித்துறையினர் ரெய்டு நடத்துகிறார்கள். இதன் மூலம் தி.மு.கவின் பிரசாரத்தை தடுக்க நினைக்கின்றனர்“ என கொதிப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

அதேநேரம், தி.மு.க தொடர்பான விமர்சனங்களை மையப்படுத்தி அ.தி.மு.க மேற்கொண்டு வரும் புதிய ரக விளம்பரங்களும் தி.மு.க தரப்புக்குக் கூடுதல் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, “தாய்மார்கள் குறித்து ஆ.ராசா பேசியது சரியா?“ என செல்போன் மூலம் குரல் அழைப்புப் பதிவுகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இதனை எதிர்பாராத தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, “தேர்தல் நடத்தை விதிமுறையை மீறி, தனிப்பட்ட வாக்காளர்களின் செல்போனுக்கு குரல் பதிவு மூலம் பிரசார (IVRS) அழைப்புகளை அ.தி.மு.க அனுப்புகிறது. அந்தக் குரல் பதிவு மூலம் தி.மு.க.வுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், அரசியல் நிகழ்வைத் திரித்துப் பரப்பப்படுகிறது. மேலே கூறப்பட்ட ஐ.வி.ஆர்.எஸ் (செல்போன் குரல் பதிவு) அழைப்புகள் மேற்கொள்ளப்படும் கால் சென்டர் தேர்தல் ஆணையத்தின் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட வேண்டும். அவற்றின் செயல்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்“ எனத் தேர்தல் ஆணையத்துக்குப் புகார் மனுவை அனுப்பியுள்ளார்.

**சேலத்தில் மட்டும் ரூ.44 கோடி!**

மேலும், தி.மு.க தரப்பு கொடுக்கும் புகார்களின்பேரில் தேர்தல் ஆணையமும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கோவை மாவட்ட ஆட்சியர், காவல் ஆணையாளர், மேற்கு மண்டல ஐ.ஜி ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டதில் ஆளும் தரப்பு சற்று அதிர்ச்சியில் உள்ளது. இருப்பினும், பண விநியோகம் தொடர்பான புகாருக்குப் பதில் அளித்த தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாஹூ, “தமிழ்நாட்டில் இது வரையில் நடத்தப்பட்ட வாகன தணிக்கையில் 319 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகப்படியாக சேலம் மாவட்டத்தில் 44 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. புகார் களின் பேரில் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது“ என்றார்.

தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்தாலும், கூகுள் பே மூலம் பண விநியோகம், டோக்கன் சிஸ்டம், பெண் வாக்காளர்களுக்கு 2 கிராமில் தங்க மூக்குத்தி என தேர்தல் களத்தை ஆளும் கட்சி இயல்பாக எதிர்கொள்வதாக தி.மு.க தரப்பில் குற்றம் சாட்டுகின்றனர். இதுதொடர்பாக பிபிசி தமிழிடம் பேசிய தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, “தேர்தல் ஆணையம் இன்னும் சற்று கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும். நாங்கள் கொடுக்கும் புகார்களை உடனுக்குடன் அவர்கள் கவனித்தாலே போதும். பொதுமக்களும் பல்வேறு குறைகளைத் தெரிவித்து வருகின்றனர். யார் புகார் தெரிவித்தாலும் தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல்துறை உதவியுடன் தான் அனைத்தும் நடக்கிறது” என்கிறார்.

**பரிமாற்றத்துக்கு போலீஸ் உதவியா?**

மேலும், “பல இடங்களில் வெளிப்படையாகவே பணம் கொடுக்கிறார்கள். இதனை அரசியல் கட்சிகளால் நேரடியாகச் சென்று தடுக்க முடியாது. ஏனென்றால், பணம் கொடுப்பதைத் தடுத்தால் வேறு மாதிரியான விளைவுகள் ஏற்படும். தேர்தல் ஆணையமும் ஓரளவு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், அதற்கு முன்பே ஆளும்கட்சி அனைத்தையும் செய்து முடித்துவிட்டது. எங்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தான் சில நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். போலீஸையும் தேர்தல் ஆணையம் கண்காணிக்க வேண்டும் என்பதுதான் எங்களின் கோரிக்கை” என்கிறார்.

“பணம் கைப்பற்றப்படுவதையே தேர்தல் ஆணையத்தின் தோல்வியாகத் தான் பார்க்கிறேன். பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பிறகு ரொக்கமாக இவ்வளவு பணம் எப்படி வெளியில் வருகிறது எனத் தெரியவில்லை. பொதுவாக, 50,000 ரூபாய்க்கு மேல் பரிவர்த்தனையை மேற்கொள்ள பான் கார்டு அவசியமானதாக இருக்கிறது. இதையும் மீறி இவ்வளவு ரொக்கம் எங்கே பதுக்கப்பட்டிருந்தது என்பதை நிதித்துறை அமைச்சகம் ஆராய வேண்டும். ஆனால், அதனைக் கண்காணிக்கத் தவறிவிட்டது.

**5 சதவிகித தொகைதான்!**

தற்போது வரையில் 350 கோடி ரூபாய்கள் பிடிபட்டுள்ளன. வெளியில் வராத பணம் இன்னும் எவ்வளவோ இருக்கிறது. அதையும் கணக்கிட்டால் 5 சதவிகிதமான தொகை மட்டுமே தற்போது பிடிபட்டுள்ளது. இதனை நிதி அமைச்சகத்தின் தோல்வியாகவே பார்க்கிறேன்” என பிபிசி தமிழிடம் விவரித்தார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில துணைத் தலைவர் ஆ.கோபண்ணா.

அ.தி.மு.க மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பிபிசி தமிழிடம் பேசிய அ.தி.மு.க தலைமைக் கழக பேச்சாளர் ஆவடிக்குமார், “அ.தி.மு.கவினர் உள்பட சிலரிடம் இருந்துகூட பணம் கைப்பற்றப்பட்டதாகத் தகவல் வெளியானது. போலீஸ் துணையோடு பணத்தைக் கடத்தியிருந்தால் அ.தி.மு.கவினர் ஏன் பிடிபட வேண்டும். தி.மு.கவினர் தங்களுக்குப் பாதிப்பு வரக் கூடாது என்பதற்காக தேர்தல் ஆணையத்தில் புகார் கொடுக்கின்றனர்.

**தவறு தி.மு.க மீதுதான்!**

இந்தத் தேர்தலில் பணத்தை நம்பி தி.மு.க களத்தில் நிற்கிறது. அவர்களது பிரசாரத்தை கவனித்துக் கொள்வதற்காகவே பல கோடி ரூபாய்களை இறைத்து ஆள்களைக் கூட்டி வந்துள்ளனர். முதல்வரும் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் மக்களை நம்பி வாக்கு சேகரித்து வருகின்றனர். தி.மு.கவினர்தான் தொடர்ந்து தவறுகளைச் செய்கின்றனர். இவர்கள் அளிக்கும் புகார்கள் எல்லாம் தோல்வி பயத்தில் செய்யும் காரியங்கள்தான். இதன்மூலம், எங்களைக் குறைகூறி மக்களை திசை திருப்புகின்றனர்” என்கிறார் கொதிப்புடன்.

“தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் சரியா?“ என மூத்த பத்திரிகையாளர் சிகாமணியிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம். “தேர்தல் ஆணையம் சரியாகச் செயல்படாமல் இருப்பதாகவே நான் பார்க்கிறேன். தற்போது வரையில் பிடிபட்டுள்ள பணம் என்பது சிறு துளி தான். இது உண்மையாகவே பணப்பட்டுவாடா செய்வதற்காக கொண்டு செல்லப்பட்ட பணம் என்று சொல்ல முடியாது. ஆர்.கே.நகர், அரவக்குறிச்சி, தஞ்சாவூர் உள்பட பல தொகுதிகளில் தேர்தலின் போது பணம் விநியோகம் செய்ததாக சிலரைக் கைது செய்தார்கள். அவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**தடுப்பு நடவடிக்கை சரிதானா?**

அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் இருந்து பணம் கொடுத்ததற்கான பட்டியலையே எடுத்தார்கள். அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? சொல்லப்போனால், சட்டமன்ற தேர்தலுக்கு முன்னரே அனைத்து தொகுதிகளுக்கும் பணம் அனுப்பப்பட்டு விட்டது. தி.மு.கவை விட அ.தி.மு.க அதிகப்படியாக பணம் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. ஆணையமும் கடந்த காலங்களில் பணி விநியோக குற்றச்சாட்டின்பேரில் யாருக்கும் தண்டனை பெற்றுத் தந்தது இல்லை. எனவே, இதனை ஒரு தடுப்பு நடவடிக்கையாக நான் பார்க்கவில்லை” என்கிறார்.

தேர்தல் திகதி நெருங்கிக் கொண்டிருப்பதால் எளிய வேட்பாளர்கள் பலரும், பிரதானக் கட்சிகளின் செயல்பாடுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சுணங்கியுள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் தடுப்பு நடவடிக்கைகளால் பெரும் தொகை பிடிபட்டாலும் புதிய புதிய யுக்திகளால் பணவிநியோகம் கட்டுக்கடங்காமல் செல்கிறது. இருப்பினும், பெரும் சவாலுடன் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயத்தில் தேர்தல் ஆணையம் தவித்துக் கொண்டிருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா தடுப்பு மருந்து

# கேள்வி பதில்கள் ?



மருத்துவர் சி.யமுனாநந்தா
MBBS, DTCD

**கொரோனாத் தடுப்பு மருந்தேற்றல் என்றால் என்ன?**

கொரோனா நோய்க்கிருமி உடலில் தொற்றிப் பாதிப்பினை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் சிபார்சுடன் வழங்கப்படும் மருந்து.

**எவ்வகையான கொரோனாத் தடுப்பு மருந்துகள் உலகில் பாவனையில் உள்ளன?**

கொரோனா வைரஸின் மேற்பரப்புப் புரதத்தை ஒத்த புரதத்தை எமது உடலில் உருவாக்கி உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை நிணநீர்க் - கலங்கள் மூலம் ஏற்படுத்தும் செய்திகாவு கரு அமில தடுப்பு மருந்து (m RNA Vaccine).

கொரோனா வைரஸின் மேற்பரப்பை ஒத்த புரதத்தின் மாதிரியினாலான புரதத்தை பூச்சிகளின் கலங்களில் உருவாக்கி அதனை மீநுண் தொழில்நுட்ப மூலமும் (Nano technology) வினைத்திறன் மிக்கதாக மாற்றிய தடுப்பு மருந்து (Protein Subunit Vaccine).

சாதாரண தடிமனை ஏற்படுத்தும் அடினோ வைரசில் கொரோனா வைரசின் மேற்பரப்புப் புரதத்தை உருவாக்கக்கூடிய பரம்பரையலகுச் செய்தியினைச் செலுத்தி (Biotechnology) வீரியம் இழக்கப்பட்ட வைரசு தடுப்பு மருந்து (Vector Vaccine). கொவிசீல்ட் மருந்து இத்தகையது.

கொரோனா வைரசினை ஆய்வுகூடத்தில் பீற்றா புறோப் பியோ லக்டோன்" என்ற இரசாயனம் கொண்டு உயர்ப்பு அகற்றப்பட்டு உருவாக்கப்பட்ட தடுப்பு மருந்து (In activated Vaccine). சீனோபாம் மருந்து இத்தகையது.

**கொரோனாத் தடுப்பு மருந்துகளின் முக்கியத்துவம் யாது?**

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் குறிப்பாக சமூகத்தில் 70 வீதத்திற்கு மேற்பட்டோர் தடுப்பு மருந்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். இதனால் சமூகத்தில் தொற்று பரம்பலைக் கட்டுப்படுத்தலாம். கொரோனாத் தொற்றினால் ஏற்படும் உயிரிழப்புக்களைக் குறைக்கும். கொரோனாத் தொற்றின் நாட்பட்ட பாதிப்புகளை தடுப்பூசி ஏற்றுவதனால் தவிர்க்கலாம்.

**தற்போதைய சூழலில் யாவர்க்கு கொரோனாத் தடுப்பு மருந்துக்களை செலுத்தலாம்?**

18வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் செலுத்தலாம். கர்ப்பிணித் தாய்மார்கள் பாலூட்டும் தாய்மார்களுக்கு கொரோனாத் தடுப்பு மருந்துகளை தற்போதைய நிலையில் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் அவர்களுக்கும் பயன்படுத்தலாம். ஒவ்வாமை உடையவர்கள் விசேட மருத்துவக் கண்காணிப்பினைப் பெறல் வேண்டும் அன்றேல் தவிர்த்தல் வேண்டும்.

கொரோனாத் தடுப்பு மருந்து முன்னுரிமை யாவர்க்கு அளிக்கப்படல் வேண்டும்.

- வைத்தியசாலையில் பணிபுரிவோர்
- பொதுப்பணியில் உள்ளவர்கள்
- வர்த்தக நிலையங்களில்
- பணிபுரிவோர்
- போக்குவரத்தில் ஈடுபடுவோர்
- உல்லாசப் பயனிகள்
- நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள்
- வயோதிபர்கள்
- நாட்பட்ட நோயுடையோர் குறிப்பாக சலரோக நோயாளிகள்.




**கொரோனாத் தடுப்பு மருந்துகளில் சிறப்பானது யாது?**

இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கக்கூடியவையாய் எளிதில் பிரயோகிக்கக்கூடியவையும் சிறப்பானது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு வீரியம் இழக்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து, மாற்றியமைக்கப்பட்ட அடினோ வைரஸ் தடுப்பு மருந்து என்பன பிரயோசனமானவை. ஏனைய தடுப்பு மருந்துகளும் நல்லவை. ஆனால் அவற்றினை எமது பிரதேசத்திற்கு பெற்றுக் கொள்வது சிரமமாக இருக்கும்.

**கொரோனாத்தடுப்பு மருந்துகளின் பக்கவிளைவுகள் யாவை?**

தற்போது பயன்படுத்தப்படும் கொவிசீல் தடுப்பு மருந்து ஏற்றிய பின் காய்ச்சல் தன்மை, உடல் களைப்பு, தலையிடி, தலைநோ, மூட்டு நோ என்பன மிகவும் பொதுவாக அதாவது 10 பேரில் ஒருவருக்கு மேல் ஏற்படலாம்.

வாந்தி, தொண்டைநோ, காய்ச்சல், இருமல் என்பன 10 பேரில் ஒருவருக்கு ஏற்படலாம். தலைச்சுற்று, உணவில் விருப்பமின்மை, வயிற்றுநோ என்பன 100 பேரில் ஒருவருக்கு ஏற்படலாம்.

**கொரோனாத் தடுப்பு மருந்து ஏற்றும்போது அவதானமாக இருக்க வேண்டிய முறைகள் யாவை?**

- கடுமையான வேலைகளை இரு நாட்களுக்கு மேற்கொள்ளக் கூடாது.
- மாமிச உணவு, மீன் என்பவற்றை இரு நாட்களுக்கு தவிர்த்து தாவர உணவுகளை உண்ணல் நல்லது.
- மதுபானம் அருந்துபவர்கள் இரு நாட்களுக்கு தவிர்க்க வேண்டும்.
- ஏனைய தடுப்பு மருந்துகளை உடனடியாக ஏற்றக்கூடாது.
- குருதித்தானம் வழங்கலையும் ஒரு மாதங்களுக்கு தவிர்க்கவும்.

**கொரோனாத் தடுப்பு மருந்துகளினால் ஏற்படும் சமூக நீர்ப்பீடனம் அல்லது மந்தை நீர்ப்பீடனம் (herd immunity) என்றால் யாது?**

சமூகத்தில் பெரும்பான்மையானவர்கள் நோய்க்கு எதிரான எதிர்ப்பு சக்தியை உடலில் கொண்டுள்ள தன்மை மந்தை நீர்ப்பீடனம் எனப்படும். இது இயற்கையான தொற்றுப் பரம்பல் அதிகரித்த நிலையிலும், தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட சூழலிலும் ஏற்படும். கொரோனாத் தொற்றைப் பொறுத்தவரையில் சமூகத்தில் 70 வீத மக்களுக்கு தடுப்பூசி செலுத்தி ஏனையவர்களும் சமூக இடைவெளி பேணல், முகக்கவசம் அணிதல், கை கழுவுதல், பயணங்களை குறைத்தல் மூலம் கொரோனாத் தொற்றைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும்.

**கொரோனாத் தொற்றின் அபாய நிலையை எவ்வாறு கண்காணிக்கலாம்?**

கொரோனா வைரசான SARS – COV -2 தொடர்ச்சியாக உருமாற்றமடைந்து வருகின்றது. இதன் மேற்பரப்புப் புரதத்தில் ஏற்படும் உருமாற்றம் சிலவேளைகளில் அபாயமான தொற்றாக அமையலாம். எனவே கொரோனா வைரசின் இரசாயன மூலக்கூற்று மாற்றங்களை தொடர்ச்சியாக ஆய்வுகூடத்தில் அவதானித்தல் வேண்டும்.

**உருமாற்றம் அடையும் கொரோனா வைரஸ் எவ்வாறு பாதிப்பை உண்டாக்கும்?**

வேகமாகப் பரவி அதிகமானவர்களில் தொற்றை ஏற்படுத்தலாம். கடுமையான நோய் நிலையினை ஏற்படுத்தலாம். சாதாரண பரிசோதனை முறைகளில் கண்டறிய முடியாது போகலாம். சிகிச்சைக்கு குணமடையாத நிலை வரலாம். உடலில் ஏற்பட்ட கொரோனா வைரசுக்கு எதிரான எநோய் எதிர்ப்பு சக்தியினை இல்லாது செய்யலாம். மேலும் தீவிரவாத நாடுகளால் உயிரியல் ஆயுதமாகப் பயன்படுத்தலாம். எனவே தடுப்பு மருந்துகள் மூலம் கொரோனா வைரசு சமூகத்தில் பரவுவதை தடுக்கலாம்.

**கொரோனாத் தடுப்பு மருந்து வழங்குவதில் சமத்துவத்தன்மை பேணல் (Equity) என்றால் என்ன?**

உலகில் சகலருக்கும் தடுப்பு மருந்து கிடைக்கக்கூடியதாக அமைதல் வேண்டும். குறித்த சிலருக்கு மட்டும் தடுப்பு மருந்து செலுத்துவது தவறான அணுகுமுறையாகும். சமூகத்தில் குறித்த பகுதியினர் தவிர்க்கப்பட்டால் அவர்களிடம் இருந்து மாறுபாடான கொரோனாப் பரம்பல் ஏற்படலாம். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

## 32A

**02. Problem Solving** பிரச்சனையை தீர்த்தல்
இதன் அடிப்படை வருமாறு
உங்கள் அனுபவத்தையும் ஆற்றலையும் கொண்டு தரப்படும் பிரச்சனையை தீர்க்க முற்படுதல்

**02A.** வெற்றுப்பகுதியை நுண்ணறிவு கொண்டு நிரப்ப முற்படல்.

**2012 13**

வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை வருமாறு கண்டறியலாம்.

முதலாவது கிடையான பெட்டியில் 2 உடன் 5 இனைக் கூட்டினால் 7 வரும் அடுத்து 7 உடன் 5 இனைக் கூட்டினால் 12 வரும்.

| | | |
|---|---|---|
| 2 | 7 | 12 |

இரண்டாவது கிடையான பெட்டியில் 7 உடன் 5 இனைக் கூட்டினால் 12 வரும் அடுத்து 12 உடன் 5 இனைக் கூட்டினால் 17 வரும்

| | | |
|---|---|---|
| 7 | 12 | 17 |

மூன்றாவது கிடையான பெட்டியில் 12 உடன் 5 இனைக் கூட்டினால் 17 வரும் அடுத்து 17 உடன் 5 இனைக் கூட்டினால் 22 வரும்

| | | |
|---|---|---|
| 12 | 17 | ....... |

எனவே சரியான விடை 2

**2012 19**

ஒவ்வொரு இலக்கத்துடனும் 1 இனைக கூட்டினால்

| | | |
|---|---|---|
| 3 | 5 | 7 |

கீடைக்கும்

| | | |
|---|---|---|
| 4 | 6 | 8 |

அடுத்து ஒவ்வொரு இலக்கத்துடனும் 1 இனைக் கூட்டினால்

(2)

| | | |
|---|---|---|
| 5 | 7 | 9 |

கிடைக்கும்.எனவே சரியான விடை 2

**2013 19**

**2 3 1 = 6** இங்கு **2 + 3 =5 +1 =6** கிடை வரிசை

**2 4 2 = 24** இங்கு **4 x 2 =8** இனி **8 x 2 = 16** நிலைக்குத்து வரிசை

**4 … 3 = 24** இங்கு **4 x 2 =8 ,** இனி **8 x 3 =24** கிடை வரிசை

**3 …. 3 = 18** இங்கு **3 x 2 =6** இனி **6 x 3= 18** நிலைக்குத்து வரிசை

**2 3 … = 30** இங்கு **2 x 3=6 ,** இனி **6 x 5 =30** கிடை வரிசை

**1 3 … = 15** இங்கு **1 x 3 =3** இனி **3 x 5 = 30** நிலைக்குத்து வரிசை

எனவே சரியான விடை2 **2,5**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இனிமேல் நிரந்தர சம்பளம்

## நாமல் ராஜபக்ஷ வாக்குறுதி



மட்டக்களப்பு, ஏப்.03

**முன்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நிரந்தர சம்பளம் வழங்கும் செயல்பாட்டினை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இந்த விடயம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அது விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிராமிய பொருளாதார மேம்பாட்டு தேசிய வேலைத்திட்டதின் சமூக அபிவிருத்தி உட்கட்டமைப்பு தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் மாவட்டத்தில் காணப்படும் பிரச்னைகள் குறித்து கருத்துக்களை தெரிவிக்கும் உரிமை மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லை என்ற குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்த அவர், எதிர்வரும் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதம் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் - யுவதிகளின் நன்மை கருதி இலங்கையிலுள்ள நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்களை ஒருங்கிணைத்ததாக மாபெரும் தொழிற்சந்தை ஒன்றை நடத்தவுள்ளதாகவும் நாமல் தெரிவித்தார். (எ)

# ஆட்சி கவிழ்ப்பு சூழ்ச்சி தற்போதும் தொடர்கிறது

## ஆளும்தரப்பு மீது சாகர சாடல்



கொழும்பு, ஏப்.03

2014 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி, தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை வீழ்த்த முன்னெடுக்கப்பட்ட சூழ்ச்சிகள் தறபோதும் தொடர்கின்றன. எதிர்த்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு சாதகமான வகையில் ஆளும் தரப்பின் அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் கருத்துரைப்பது அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் அதேவேளை, அவர்களது நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணிகள் சங்க மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

### கொரோனா தொற்று அபாயம்:

# தலையணை சண்டையை தவிர்க்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப்.03

கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தை கருத்தில்கொண்டு, தலையணை சண்டை, கயிறிழுத்தல் போன்ற புத்தாண்டு விளையாட்டுக்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, இசை நிகழ்ச்சிகளை நடத்த வேண்டாம் என்றும் சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகள், பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சூசிபெரேரா தெரிவித்தார்.

பெருமளவில் மக்கள் கூடும் கூட்டங்களைத் தவிர்த்து வீட்டில் இருந்தே தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஈடுபடுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (எ)

# கொரோனா முழுமையாக கட்டுப்படுத்தப்படவில்லை!

## பி.சி.ஆர். சோதனையை குறைப்பது தற்கொலைக்கு சமம் - சுதத் சமரவீர



கொழும்பு, ஏப்.03

கொரோனா வைரஸ் தொற்று முழுமையாகக் கட்டுப்படுத்தப்படவில்லை என்றாலும், நிலைமை ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் 800 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் தற்போது 200 பேர் மட்டுமே நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது, தற்கொலை செய்வதற்குச் சமம் என்றும் சுதத் சமரவீர சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், நாட்டில் எழுமாறான முறையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனைகள் தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, பண்டிகைக் காலங்களில் முக்கிய இடங்களிலிருந்து வெளியேறும் மக்களுக்கு அன்ரிஜென் சோதனைகளை நடத்தப்போவதாகவும் சுதத் சமரவீர குறிப்பிட்டார். (எ)

# தமிழ் கல்வி பிரிவு நீக்கம்!

கொழும்பு, ஏப்.03

ஊவா மாகாண அமைச்சுக்களின் விடயதானங்களிலிருந்து தமிழ் கல்விப் பிரிவு நீக்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலாகும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊவா மாகாண ஆளுநர் முஸம்மிலால் புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கூட்டுறவு விவகாரம் மற்றும் தமிழ் கல்வி தொடர்பான அமைச்சு என ஏற்கனவே இருந்த அமைச்சின் விடயங்களிலிருந்து தமிழ் கல்விப் பிரிவு நீக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள்களுடன் வவுனியாவில் ஐவர் கைது

வவுனியா, ஏப்.03

வவுனியாவில் போதைப் பொருள்களுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் விஷேட நடவடிக்கையின் போது வவுனியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவர்களிடமிருந்து ஹெரோயின் மற்றும் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதில் வைரவ புளியங்குளம் பகுதி மற்றும் சிவபுரத்தைச் சேர்ந்த இருவர்களிடமிருந்து 620 மில்லிக்கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மற்றைய மூவரிடமிருந்து 04 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (எ)

# ஜனாதிபதி ஆலோசகர் எனக்கூறி பணம் வசூலித்தவர் சிக்கினார்!

கொழும்பு, ஏப்.03

ஜனாதிபதியின் ஆலோசகராகத் தன்னை அடையாளம் காட்டி, நபர்களிடமிருந்து பணம் வசூலித்தமைக்காக கொழும்பு, பொரளை பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பேஸ்லைன் பகுதியில் வசிக்கும் 38 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

நிலம், வீடுகள் மற்றும் வேலை வாய்ப்புக்களை வழங்குவதன் அடிப்படையில் இவர் பணம் வசூலித்துள்ளதாக ஆரம்ப கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# ஈஸ்டருக்கு அதிகபட்ச பாதுகாப்பு உத்தரவாதம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.03

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மக்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சமூக இடைவெளி மற்றும் பிற சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் மக்கள் எந்தவித அச்சமும் இல்லாமல் ஆராதனைகளில் பங்கேற்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு தேவாலயத்துக்கும் தனித்தனியே பாதுகாப்பு வழங்குவது மிகவும் கடினம் என்பதால் பொலிஸாருக்கு



மேலதிகமாக இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் பாதுகாப்பை வழங்கும் செயல்பாடுகள் இந்த வார ஆரம்பத்திலிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார். (எ)

# அரசமைப்புக்கு முரணாக அரசாங்கம் செயல்படாது

## ரொஷான் ரணசிங்க உறுதி



கொழும்பு, ஏப்.03

**மாகாண சபைத் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும். நல்லாட்சி அரசாங்கம் அரசமைப்புக்கு முரணாகச் செயல்பட்டதைப் போன்று தற்போதைய அரசாங்கமும் அரசமைப்புக்கு முரணாகச் செயல்படாது. மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பது அவசியமானதாகும். குறைபாடுகளுடன் தேர்தலை நடத்தினால் எதிர்காலத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.**

அநுராதபுரத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

மாகாண சபைகள் மூலம் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளின் உச்ச பயனை நாட்டு மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். 1000 மில்லியன் ரூபா நிதி ஒன்பது மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் சிறந்த முறையில் நிறைவுப் பெறவில்லை. மாகாண சபைகளின் செயல்பாடு இனிவரும் காலங்களில் மாகாண சபை அமைச்சால் நேரடியாகக் கண்காணிக்கப்படும்.

அபிவிருத்திப் பணிகள் மாகாண சபைகளினாலும், மத்திய அரசாங்கத்தாலும் இருவேறுபட்ட திட்டமிடலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் பெருந் தொகையான நிதி வீண்விரயமாக்கப்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் மாகாண சபைகளை மையப்படுத்தி மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே, அபிவிருத்திப் பணிகளின் உச்ச பயனை நாட்டு மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவோம். நல்லாட்சி அரசாங்கத்தை போன்று அரசமைப்புக்கு முரணாகச் செயல்பட வேண்டிய தேவை கிடையாது. மாகாண சபைகளுக்கு மக்களின் பிரநிதிகள் ஜனநாயக முறைக்கமைய தெரிவு செய்யப்படுவார்கள். அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி மாகாண சபைகளைச் சிறந்த முறையில் செயல்படுத்துவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்- என்றார். (எ)

### ஓமானில் துன்புறுத்தலை அனுபவித்த 248 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு,ஏப்.03

வேலைக்காக ஓமானுக்குச் சென்று அங்கு துன்புறுத்தலுக்குள்ளன 248 இலங்கையர்கள் நாடு திரும்பினர். இவர்களில் பெரும்பாலோர் பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினர் நேற்று முன்தினம் இரவு இரண்டு விமானங்கள் மூலம் நாட்டை வந்தடைந்தனர் என விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# சங்கிலியன் வீதியில் வீட்டினுள் புதையல் தேடி அகழ்வுப் பணி!

## பொலிஸாரை கண்டதும் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.03

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியிலுள்ள வீடொன்றினுள் புதையல் தேடி அகழ்வுகள் இடம்பெற்றனவா? என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நல்லூர் - சங்கிலியன் வீதியிலுள்ள வீடொன்றினுள் இராணுவத்தினர் எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சிலர் நேற்று முன்தினம் நண்பகல் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

நீதிமன்ற அனுமதி பெறப்படாத நிலையில் அகழ்வுப்பணிகளை முன்னெடுக்க முடியாது. அதனால் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

பொலிஸாரின் வருகையை கண்டதும், அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இதனையடுத்து வீட்டின் உரிமையாளரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்திய போது முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து வீட்டினை பொலிஸார் பார்வையிட்ட போது, வீட்டினுள் சாமி அறைப் பகுதியிலேயே அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுள்ளன. இதனால் புதையல் தேடி அகழ்வுகள் இடம்பெற்று இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ)

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில்

கொழும்பு, ஏப். 03

இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியத்தினால் (CEWET) புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதற்காக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் புலமைப் பரிசில்கள் க.பொ.த உயர்தரம், பட்டப் படிப்புக் கற்கை நெறிகள் மற்றும் இலங்கையின் ஏதேனும் அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில் அல்லது தொழில்நுட்பக் கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கானவையாகும் என்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

க.பொ.த சாதாரண தரத்தில் (குறைந்தது 6 திறமைச் சித்திகளுடன்) சித்தியடைந்த அல்லது உயர் தரத்தில் சித்தியடைந்த 25 வயதிற்கு குறைந்தவர்கள் இந்தப் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றிதழ், க.பொ.த சாதாரண தரம் அல்லது உயர் தரப்பரீட்சைப் பெறுபேற்றுத் தாள்கள், பெற்றோர்களது சமீபத்தைய சம்பளத்தாள் விபரம் மற்றும் பெற்றோரது வேலை தொடர்பாக தோட்ட அத்தியட்சகரினது அத்தாட்சி என்பவற்றின் பிரதிகளுடன் இணைந்ததாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் www.hcicolombo.gov.in எனும் இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். விண்ணப்பப் படிவங்களை இந்திய உயர் ஸ்தானிகராலயம், 36-38 காலி வீதி, கொழும்பு 3 மற்றும் இந்திய பிரதி உயர் ஸ்தானிகராலயம், இல. 31, ரஜபிகில்ல மாவத்தை, கண்டி ஆகிய இடங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் செயலாளர், ஊநுறுநுவு மேஃபா, இந்திய உயர் ஸ்தானிகராலயம், த.பெ எண் 882, கொழும்பு 03 என்ற முகவரிக்கு இம் மாதம் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படுதல் வேண்டும் என்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# ஆளும்தரப்பு உறுப்பினர்கள் வழக்குத் தொடரத் தீர்மானம்

## காரணத்தை வெளியிட்டார் காமினி

கொழும்பு, ஏப்.03

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் எல்லை நிர்ணய விவகாரம், தேர்தல் முறைமை உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திர பொது ஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் பெரும்பாலானோர் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த இணக்கம் தெரிவித்துள்ளனர் என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# ஆயர் யோசேப்பு ஆண்டகையின் வாழ்வும் பணிகளும்!

இராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் 01.04.2021 அன்று தனது 81ஆவது வயதில் இறைபதமடைந்தார்.

மன்னார் மறைமாவட்டத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஒளிவிளக்கு இப்போது அணைந்து விட்டது. நலிந்த மக்களுக்காக ஓங்கி ஒலித்த குரல் இன்று அமைதியடைந்து விட்டது. மனித உரிமைகளின் காவலராக விளங்கிய துணிவுமிக்க ஒரு தலைவர் இன்று நீங்காத் துயில் கொண்டு விட்டார்.

இராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டம் சார்ந்த தனது சமயக் கடமைகளை செவ்வனே நிறைவேற்றினார். ஒரு மறைமாவட்டத்தில் ஆயர் செய்ய வேண்டிய பணிகளை அவர் முழுமையான உற்சாகத்தோடு செய்தார். திருப்பலி, திருவிழாக்கள், பங்குத்தரிசிப்புக்கள், ஆலோசனைகள், கூட்டங்கள், மாநாடுகள், ஆலய மற்றும் பங்குமனைக் கட்டுமானங்கள், ஏழைகளுக்கான உதவிகள் என அவர் தன் கடமைகளைச் சிறப்பாகச் செய்தார்.

இவர் மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பொறுப்பேற்ற பின்னர் மறைமாவட்டத்தை ஆன்மீக, ஒழுக்க, சமூக, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்ற பல்வேறு புதிய முயற்சிகளை முன்னெடுத்தார். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடுகளைக் கூட்டி குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என அனைத்துத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்று, திட்டங்களைத் தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சித்தார்.

இவருடைய காலத்தில் மன்னார் மறைமாவட்டத்தில் பல புதிய பங்குகள் உருவாக்கப்பட்டன. இவர் மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுத்த போது 15 பங்குகள் இருந்தன. இவர் ஓய்வுபெறும் போது 38 பங்குகளாக அவை அதிகரித்திருந்தன.


யுத்த சூழ்நிலையில் பல ஆலயங்கள், பங்குமனைகள் அழிக்கப்பட்டன அல்லது சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டன. பல ஆலயங்கள் மற்றும் பங்குமனைகள் கால நீட்சியினால் பழுதடைந்த நிலையில் இருந்தன. இவ்வாறான நிலையில் பல்வேறு தரப்பிலிருந்து உதவிகளைப் பெற்று புதிய ஆலயங்களை, புதிய பங்குமனைகளைக் கட்டி எழுப்ப இவர் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்.

பம்பைமடுவில் அன்னை திரேசாவின் அருட்சகோதரிகளை வரவழைத்து முதியோர் மற்றும் கைவிடப்பட்டவர்களைப் பராமரிக்க ஒரு இல்லத்தை ஆரம்பித்தார். முருங்கனில் டொன் பொஸ்கோ குருக்களை வரவழைத்து இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்க ஆவன செய்தார். அடம்பனில் இயேசு சபைக் குருக்களை வரவழைத்து அவர்களின் பணி மறைமாவட்டத்திற்கு கிடைக்க வழி செய்தார்.

இந்தியாவில் இருந்து பல புதிய பெண் துறவற சபைகளை மன்னார் மறைமாவட்டத்திற்கு வரவழைத்து இந்திய அருட்சகோதரிகளின் பணியை மக்கள் பெற வழிவகுத்தார். புதிதாக உருவாக்கப்பட்ட பங்குகளில் புதிய கன்னியர் மடங்களையும் ஏற்படுத்தி மக்களை ஆன்மீகத்திலும், ஒழுக்கத்திலும் வளர்க்கப் பாடுபட்டார். மடுத்திருப்பதியில் தியான இல்லம் ஒன்றைக் கட்டியெழுப்பி அதன் மூலம் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஏனைய மறைமாவட்டத்தவர்களும் பயன்பெற வழிகோலினார்.

குருக்கள் துறவியர் நலனில் அக்கறையோடு செயற்பட்டார். பொதுநிலையினரின் உருவாக்கத்தில் அதிக கரிசனை எடுத்தார். திருச்சபையின் திருவழிபாடுகளை திருச்சபை ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப நடத்தவேண்டுமென்பதை வலியுறுத்தினார். இவ்வாறு ஓர் ஆயர் என்ற வகையில் தனது மறைமாவட்டம் சார்ந்த கடமைகளில் அவர் அதிக ஈடுபாட்டோடு, அர்ப்பணிப்போடு உழைத்தார். இதை விட இலங்கை ஆயர் பேரவையில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பாகச் செய்தார்.

கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்துநின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க அவர் அரும்பாடு பட்டார். சிறைகளில் வாடும் கைதிகளை அவர் அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர்களோடு தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருந்தார். காணாமல் போனோர் சார்பாக நின்று அவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களின் கதியை வெளிக்கொணர ஓயாது உழைத்தார். யுத்தத்தால் தமது இடங்களை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டார்.யுத்தத்தால் தொழில் வாய்ப்புக்களை இழந்தவர்கள் தொழில்களை ஆரம்பிக்க வேண்டிய உதவிகளைச் செய்தார்.



யுத்தத்தால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு வாழ்வுதய நிறுவனத்தின் உதவிக்கரம் பிரிவு மூலம் உதவிகளைப் புரிந்தார். வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள வரோட் நிறுவனத்தின் ஊடாகவும் இவர்களின் புனர்வாழ்வுக்காகப் பாடுபட்டார். யுத்தத்தாலும், சுனாமியினாலும் பெற்றோரை இழந்து ஆதரவற்று நின்ற பெண் சிறார்களுக்கு வவுனியாவில் சலேசிய அருட்சகோதரிகளின் பராமரிப்பில் ஒரு இல்லத்தை ஆரம்பித்தார். அதேபோல் மன்னாரிலும் ஆண் சிறார்களுக்கான ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். இவ்வாறு இன்னும் பல துயர்துடைப்புப் பணிகளை முன்னெடுத்தார்.

விமானக் குண்டுத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல், கண்ணிவெடித் தாக்குதல்கள் என எப்படியான அனர்த்தங்கள் இடம்பெற்றாலும் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற முதல் ஆளாக களத்திற்கு விரைந்து சென்றார். காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார். இழப்பின் சோகத்திலும், அச்சத்திலும், ஆபத்திலும் இருந்த மக்களுக்கு தனது பிரசன்னத்தினால் ஆறுதலைக் கொடுத்தார். இதுபோன்று பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள்மேல் அக்கறையுள்ள ஓர் நல்ல ஆயனாக, அவர் அனர்த்தங்களின் செய்தியை அறிந்து ஆபத்துக்கள் மத்தியில் களத்திற்கு விரைந்து சென்றார். போர்ச் சூழல் நிலவிய காலத்தில் ஆயர் யோசேப்பு ஆண்டகை குரலற்ற தமிழ் மக்களின் குரலாக ஒலித்தார். உண்மைகளை எடுத்துக்காட்டிய, நீதியை வலியுறுத்திய அவருடைய குரல் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஓங்கி ஒலித்தது.

ஆட்சியில் இருந்த அரசுத் தலைவர்களை, அமைச்சர்களை மற்ற ஆயர்களுடனும், தனியாகவும் காலத்துக்குக் காலம் சந்தித்து மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தார்.

தன்னைச் சந்திக்க வரும் அரசாங்க அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐக்கியநாடுகள் சபையின் பல்வேறு பிரிவைச் சார்ந்த பிரதிநிதிகள் போன்றவர்களுக்கு களநிலமைகளை தெளிவாக விளங்கப்படுத்தினார். இவ்வாறு அவர் குரலற்ற மக்களின் குரலாக ஒலித்தார்.

ஆயர் யோசப் ஆண்டகை இயல்பாகவே இறைவாக்கினருக்குரிய துணிவைப் பெற்றிருந்தார். துன்புறும் மக்களுக்காக இரங்கும் இரக்க உள்ளத்தையும் அவர் பெற்றிருந்தார். இவை அனைத்திற்கும் மேலாக காலத்தின் தேவைக்கு பதில் அளிக்க வேண்டிய ஒரு நல்ல திருச்சபைப் பணியாளனுக்குரிய தெளிவையும் அவர் கொண்டிருந்தார்.

தன் ஆடுகளுக்காக உயிர் கொடுத்த நல்லாயன் இயேசுவை அவர் தன் கண்முன் கொண்டிருந்தார். ஆயர் யோசப் ஆண்டகை பணி செய்த காலம் ஓர் இக்கட்டான காலம். இப்படியான உயிராபத்து மிக்க ஒரு காலகட்டத்தில்தான் ஆயர் யோசேப்பு ஆண்டகையின் பணி நடைபெற்றது.

ஆயர் அவர்கள் மக்களின் அடிப்படைத் தேவைகள், நிவாரணம் வழங்கல், மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயலாற்றினார். விடுதலைப் புலிகள், தமிழ் அரசியல் தலைவர்கள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினருடனும் அவர் தொடர்பாடல்களை மேற்கொண்டிருந்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் பல்வேறு தொடர்பாடல்களை, கலந்துரையாடல்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து ஆலோசித்தார். அதேபோன்று அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களோடும் நெருங்கியவிதமாகச் செயலாற்றினார். இதன் காரணமாக பல்வேறு தரப்பினரிடமிருந்து எதிர்ப்புக்களை, விமர்சனங்களை, கண்டனங்களை எதிர்கொண்டார்.

1992ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு நடுப் பகுதியில் அவர் சுகவீனமடையும் வரை இடைவிடாமல் தொடர்ச்சியாக இயங்கி வந்தார். திருச்சபையின் ஒழுங்குவிதிக்கு அமைய 75 வயது நிறைவில் தான் பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1 இற்கு அமைவாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு அறிவித்தார். 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி இவருடைய பணி ஓய்வுக்கான கோரிக்கையை திருத்தந்தை ஏற்றுக் கொண்டார்.

ஆயர் அவர்கள் மக்கள் பணியில் தன்னை முழுமையாகக் கரைத்துக் கொண்டார். இரவு பகல், மழை, வெயில் பாராது நீண்ட பயணங்களை மேற்கொண்டார். கண் துஞ்சாது, பசி நோக்காது கருமமே கண்ணாகச் செயற்பட்டார்.

2014ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் நிறைவு நாள் நிகழ்வின் போது மன்னார் தமிழ்ச் சங்கம் “இனமான ஏந்தல்“ என்ற விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. 2015ஆம் ஆண்டு கொழும்புக் கம்பன் கழகம் இவருக்கு கம்பன் புகழ் விருதினை வழங்கிக் கௌரவித்தது.

ஈழத்துக் கத்தோலிக்க திருச்சபை, இன்னும் குறிப்பாக ஈழத்துத் திருச்சபையின் பணியாளர்கள் ஆயர் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற விழைய வேண்டும். காலத்தின் தேவைக்கு ஏற்ப துணிவோடு, உறுதியோடு செயலாற்ற வேண்டும். ஆயர் யோசப் ஆண்டகையின் வாழ்வும் பணிகளும் இன்றைய, நாளைய தலத்திருச்சபைக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு








மியாமி ஓப்பன் ரென்னிஸ்:

# ஆஷ்லே - பியாங்கா இறுதியில் மோதல்!

மியாமி, ஏப். 03

அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டியும், கனடாவின் பியாங்கா அண்ட்ரஸூம் இறுதியாட்டத்திற்கு முன்னேறினர்.

அமெரிக்காவின் பிரபல தொடரான மியாமி ஓப்பன் ரென்னிஸ் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமானது. இதில், அரையிறுதிப் போட்டிகள் நேற்று நடந்தன.

முதல் அரையிறுதியில் கனடாவின் பியாங்கா கிரேக்கத்தின் மரியா சக்கரியை எதிர் கொண்டார். மிகக் கடினமான இந்தப் போட்டி மூன்று செற்களுக்கு நீண்டது.

முதல் செற்றை 7-6 என்ற கணக்கில் பியாங்கா வெற்றி கொண்டார். அடுத்த செற்றை 3 - 6 என்ற கணக்கில் சக்கரி வென்றார். மூன்றாவது செற்றை 7 - 6 என்ற கணக்கில் பியாங்கா வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.

இரண்டாவது அரையிறுதியில், அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டியும், உக்ரைனின் எலினா சுவிற்றோலினாவும் மோதினர். முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்ட்டி 6 -3 , 6- 3 என்ற செற்களில் இலகு வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு நுழைந்தார்.

இன்று நடக்கும் இறுதியாட்டத்தில் பியாங்காவும், ஆஷ்லே பார்ட்டியும் மோதவுள்ளனர். (ஐ)

# மேற்கிந்தியத் தீவுகள் அதிரடி! தடுமாறுகிறது இலங்கை அணி!!

அன்டிகுவா, ஏப். 03

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக 348 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடி வருகின்றது.


மேற்கிந்தியா சென்றுள்ள இலங்கை அணி தற்போது இரண்டாவது டெஸ்டில் விளையாடி வருகின்றது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்ஸில் 354 ஓட்டங்களை குவித்தது. பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி, மூன்றாம் நாள் ஆட்ட நிறைவில் 250 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்திருந்தது.

நான்காம் நாள் ஆட்டம் தொடங்கியபோது, மேலதிகமாக 8 ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் 258 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இலங்கை இழந்தது.

377 ஓட்டங்கள் பின்னிலையில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸை தொடங்கியது.

திரிமன்னே, கருணாரட்ன ஆட்டத்தை தொடங்கினர். நான்காம் நாள் ஆட்டம் முடிவடையும்போது, 9 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களை எடுத்திருந்தது. (ஐ)



# மியன்மாரில் 43 சிறார் கொலை! சூகி மீது புதிய குற்றச்சாட்டுகள்!!

யங்கூன், ஏப். 03

மியன்மாரில் இராணுவம் ஆட்சி பொறுப்பை ஏற்ற பின்னர் 43 சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

மியன்மாரில் கடந்த  கடந்த பெப்ரவரி முதலாம் திகதி சதிப் புரட்சி மூலம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் ஜனநாயகப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு போராடி வருபவர்கள் மீது இராணுவம் பலத்த அடக்குமுறைகளை பிரயோகித்து வருகின்றது. இதன்படி, இதுவரை 536 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் 43 பேர் சிறுவர்களாவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள ஆங்சான் சூகி மீது நாட்டின் இரகசிய சட்டங்களை மீறினார் என்று புதிய குற்றச்சாட்



டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் ஆங் சாங் சூகி உள்ளிட்டோருக்கு 14 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனத் தெரிய வருகிறது. (ஐ)




# தாய்வானில் ரயில் விபத்து: 48 பயணிகள் உயிரிழப்பு!

தைபே, ஏப். 03

தாய்வானில் 350 பேருடன் பயணித்த ரயில் ஒன்று சுரங்கப் பாதையில் தடம் புரண்டதில் 48 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில், 72 பேர் சுரங்கத்துக்குள் சிக்குண்டுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

ரயில் தடம் புரண்டதால் சுரங்கப் பாதை சேதமடைந்தமையால் உள்ளே அகப்பட்டவர்களை மீட்க போர் கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று தாய்வான் மத்திய அவசரகால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று தலைநகர் தைபியில் இருந்து தைதுங் நகரத்திற்கு சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டது.

இந்தி விபத்து தாய்வானின் வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரும் ரயில் விபத்து என்று அந்த நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ)

# அமெரிக்க மாகாணத்தில் யோகாசனத்துக்கு தடை!

மத மாற்ற அச்சமே காரணமாம்

நியூயோர்க், ஏப். 03

மாகாணத்தின் பாடசாலைகளில் யோகாசனத்துக்குவிதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கும் சட்டத் திருத்தத்தை அமெரிக்காவின் அலபமா மாகாண அரசு நிறுத்திவைத்துள்ளது.

யோகாசனம் இந்து கலாசாரத்தைச் சேர்ந்தது. அதனை பாடசாலைகளில் கற்றுக் கொடுத்தால் மாணவர்கள் இந்து மதத்துக்கு மாறிவிடுவார்கள் என்று அங்குள்ள கிறிஸ்தவ மதப் பழமைவாதிகள் எதிர்ப்பு தெரிப்பதே இதற்குக் காரணமாகும்.

ஐ.நா.வால் அங்கீகரிக்கப்பட்டு ‘சர்வதேச யோகா தினம்’ மதங்களைத் தாண்டி கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில், அலபமா மாகாணத்தில் யோகாவுக்கு தடை நீடிப்பது பரபரப்பான செய்தியாகியுள்ளது.

முன்னதாக, கடந்த 1993ஆம் ஆண்டு யோகாசனம், தியானம் ஆகியவற்றுக்கு பாடசாலைகளில்  தடை விதித்து அலபமா மாகாண கல்வி அமைச்சு நடவ டிக்கை எடுத்தது. கிறிஸ்தவ மதப்பழைமைவாதிகளின் நெருக்கடியே அப்போது இதற்குக் காரணமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சச்சின் டெண்டுல்கர் மருத்துவமனையில்!



புதுடில்லி, ஏப். 03

கொரோனா தொற்றால் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனா தொற்று உறுதியானது. இதனையடுத்து அவர் வீட்டில் தனிமையில் இருந்து வந்தார்.

இந்நிலையில் மருத்துவ ஆலோசனையின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளேன் என தனது ருவிட்டரில் சச்சின் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணித்தியாலயத்தில் 4,511 குற்றச்சாட்டுக்கள்

## விபத்துக்களில் 12 பேர் மரணம்



கொழும்பு, ஏப்.03

**மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விஷேட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கமைய நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்தில் 4,511 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாடளாவிய ரீதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி ஏற்படும் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக விஷேட சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையானது நேற்று வரை இடம்பெற்றது.

இதற்கமைய நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் 4,511 குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தியதாக 122 பேர் கைது செய்யப்பட்டனர்.

தலைக்கவசம் அணியாமல் பயணித்த 650 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வீதி ஒழுங்கு விதிகளை முறையாகப் பேணாமை தொடர்பில் 1021 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்தில் 10 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன், 12 பேர் உயிரிழந்தனர்.

இதன்போது 5 பாதசாரதிகளும், மோட்டார் சைக்கிளில் பயணித்த 3 பேர், ஓட்டோவில் சென்ற 2 பேர் மற்றும் லொறியில் பயணித்த ஒருவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

தற்போது மோட்டார் சைக்கிள்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகள் , மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களை சிரமத்துக்குள்ளாக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட தீர்மானம் கிடையாது.

விபத்துகளால் அவர்களுக்கு ஏற்படும் இழப்புக்களை தவிர்ப்பதற்காகவே இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் பொலிஸாரின் இந்த சோதனை நடவடிக்கைகளுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்- என்றார். (எ)

# ஆன்மீகத்தின் குரலாக மட்டும் ஒலிக்காது இனவிடுதலையின் குரலாகவும் ஒலித்தவர் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப்!

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் இரங்கல்



கிளிநொச்சி,ஏப்.03

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் பெரும் மதிப்புக்குரிய இராயப்பு ஜோசப் அவர்களின் மறைவு ஆன்மீகத்துக்கு மட்டுமன்றி இனத்துக்குக்கும் பேரிழப்பு. மறைந்த ஆயர் அவர்கள் ஆன்மீகத்தின் குரலாக மட்டுமன்றி ஒடுக்கு முறைக்குள்ளான இனத்தின் குரலாகவும் ஒலித்தவர். இன்று

அந்தக் குரல் ஓய்ந்துவிட்டது என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக்குறிப்பில்:

மன்னார் மறை மாவட்டத்தில் ஆயராக அவர் பணியாற்றிய காலத்தில் ஆன்மீகப் பணிகளுக்கு அப்பால் பலவிதமான மனிதாபிமான பணிகளில் அதிக அக்கறையோடு

செயல்பட்டுள்ளார். முக்கியமாக ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் இனத்தின் பலமான குரலா ஒலித்தவர். இனம் சார்ந்து உண்மைகளை சர்வதேசம் வரை கொண்டு சென்ற ஒரு சக்திமிக்க குரல் ஒய்ந்து விட்டது. இவரின் இழப்பு கிறிஸ்தவ மக்களுக்கு மட்டுமன்றி தமிழ் இனத்துக்கும் பேரிழப்பாகும் எனத் தெரிவித்துள்ளார். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் யாழில் குடும்பஸ்தர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.03

50 கிராம் ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குடும்பஸ்தர் ஒருவர் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை கட்டுவனைச் சேர்ந்த 49 வயது 3 பிள்ளைகளின் தந்தையே நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சுமார் 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இவர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர். (எ)





# நுவரெலியாவில் வசந்த கால நிகழ்வுகள் ஆரம்பம்

ஹற்றன், ஏப்.03

நுவரெலியாவில் வசந்த கால நிகழ்வுகள் கிரகரி வாவியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியுள்ளன.

நுவரெலியா மாநகர சபை முதல்வர் சந்தணலால் கருணாரத்ன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மத்திய மாகாண ஆளுநர், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ரமேஷ்வரன், நுவரெலியா மாவட்ட செயலாளர், நுவரெலியா பிரதேச சபை தலைவர், இராணுவ அதிகாரி, பொலிஸ் அதிகாரி, கடற்படை அதிகாரி, விமானப்படை அதிகாரி, என பலரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டார்.

வருடந்தோறும் நடைபெறும் மலர்க் கண்காட்சி, படகோட்டம், கார் பந்தயம், குதிரைப்பந்தயம், பூப்பந்து, ரேபிள் டெனிஸ், குழிப்பந்தாட்டம், கிரகரிவாவியில் நீர் விளையாட்டு, மோட்டார் சைக்கிள் தடை தாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் மட்டுப்படுத்தப்பட்ட களியாட்ட விழாக்களே நடைபெறவுள்ளன. கொரோனா வைரஸ் காரணமாக சில விளையாட்டு நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளன. (எ)

# வெலிகந்த பிரதேச சபை தவிசாளர் பதவி நீக்கம்

வெலிகந்த, ஏப்.03

பொலநறுவை மாவட்டத்தின் வெலிகந்த பிரதேச சபைத் தவிசாளர் பியதிஸ்ஸ கமகே பிரியந்த கவிது அபேசூரிய உடன் அமுலுக்கு வரும் வகையில் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஆளுநர் மஹிபால ஹேரத் வெளியிட்டுள்ளார்.

பிரியந்த கவிது அபேசூரிய, பிரதேச சபை சட்டத்தை மீறி பல தவறுகளை செய்ததாகவும், அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளமையாலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஆளுநர் வர்த்தமானி அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# சினோபார்ம் தடுப்பூசி சீனர்களுக்கானது: அறிவிப்பில் எவ்வித உண்மையுமில்லை!

## சீனா திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, ஏப்.03

இலங்கைக்கு நன்கொடையாக வழங்கிய சினோபார்ம் தடுப்பூசி சீனர்களுக்கானது என்ற அறிவிப்பில் எந்த உண்மையும் இல்லை என சீனா அறிவித்துள்ளது.

இலங்கையில் 3000 - 4000 சீன பிரஜைகள் மட்டுமே உள்ள நிலையில் இவ்வாறு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள தடுப்பூசிகளில் ஒன்று அல்லது இரண்டு சதவீதம் மட்டுமே அவர்களுக்குச் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 இலட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்திக்கொள்ளும் வகையில் 6 இலட்சம் டோஸ் சினோபார்ம் தடுப்பூசியை சீனா நன்கொடையாக வழங்கியுள்ளது என சீனா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மீதமுள்ளவை இலங்கையர்களுக்கானது எனக் குறிப்பிட்டுள்ள அவர், எனவே சினோபார்ம் தடுப்பூசி சீனர்களுக்கானது என்ற அறிவிப்பில் எந்த உண்மையும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனம் சினோபார்ம் தடுப்பூசிக்கு இன்னும் அங்கீகாரம் வழங்காத நிலையில் குறித்த தடுப்பூசிகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அத்தோடு அதற்கு அரசியல் ரீதியாக மட்டும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம்சுமத்தியுள்ளது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகச்சந்திப்பில் பேசிய அமைச்சர் ரமேஷ் பத்திரண, சினோபார்ம் தடுப்பூசி சீனர்களுக்கானது எனக் கூறியதுடன் அரசாங்கம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரத்துக்காக காத்திருப்பதாகவும் கூறியிருந்தார்.

இதேவேளை, சீனாவின் தடுப்பூசி தரமற்றவை என்றும் பயன்பாட்டுக்கு ஏற்றதல்ல என சுகாதார அதிகாரிகள் கூறியுள்ள நிலையில் ஜனாதிபதி ஏன் இத்தகைய தடுப்பூசிகளை இறக்குமதி செய்கிறார் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையிலேயே சீனாவின் மேற்கண்டவாறான அறிவிப்பு வெளியாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சுதந்திரக் கட்சிக்குள் வலுவடையும் சந்திரிகா - மைத்திரி பலப்பரீட்சை

## 5 ஆம் திகதி செயற்குழுக் கூட்டம் குறித்து குழப்பம்

கொழும்பு, ஏப்ரல் 03

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவின் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டம் நாளை மறுதினம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதற்கு அழைக்கப்படாமையில் கட்சிக்குள் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அணிக்கும், சந்திரிகா அணிக்கும் பலப்பரீட்சையின் உச்ச கட்டமாகவே இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.**

கட்சி யாப்புக்கு முரணாக செயற்குழுக் கூட்டம் நடத்தப்படவிருப்பதால், இதனை உடனடியாக ரத்துச் செய்யுமாறு சந்திரிகா குமாரதுங்க கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

கட்சியின் போஷகராக தான் இருக்கும் நிலையிலும், தன்னை அழைக்காததை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். தன்னைவிடவும், கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் இவ்வாறு அழைக்கப்படாமல் இருப்பது கட்சியின் யாப்பு விதிகளுக்கு முரணானது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தேர்தல் தொகுதிகளுக்கான அமைப்பாளர்களுக்குப் பதிலாக தன்னுடைய ஆதரவாளர்களை அழைப்பதற்கு தயாசிறி ஜயசேகர சதித்திட்டம் தீட்டியிருப்பதாகவும் சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

கட்சியின் யாப்பின்படி தேர்தல் தொகுதி ரீதியான அமைப்புகள் உருவாக்கப்பட்டு, அகில இலங்கை ரீதியில் செயற்குழுக் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராக தான் இருப்பதால், கட்சியின் முக்கியமான கூட்டங்கள் அனைத்துக்கும் தான் அழைக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகாவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அணிக்கும் இடையில் உருவாகியுள்ள பலப்பரீட்சை உச்ச கட்டத்துக்குச் சென்றிருப்பதையே இது வெளிப்படுத்துகின்றது. (ஐ)

# மரியசேவியரின் மறைவு கலையுலகுக்கு பேரிழப்பு

## இந்து குருமார் ஒன்றியம் இரங்கல்

கொழும்பு, ஏப். 03

மரியசேவியர் அடிகளாரின் மறைவு கலையுலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று இந்து குருமார் அமைப்பு நேற்று விடுத்த இரங்கல் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மேலும், "யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகர்த்தாவாகவும், வழிநடத்துநராகவும் திகழ்ந்தவர் - எமது அன்புக்கும் மரியாதைக்குமுரிய மரியசேவியர் அடிகள். கலையை உயிராக நேசித்து இறுதிவரை வாழ்ந்தவர். கலையை மேலும் சிறப்புடன் வளர்ப்பதற்கும் கலைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம் பலவித பயன்தரு முயற்சிகளில் வெற்றி கண்டவர். மரியசேவியர் அடிகளின் மறைவு கலையுலகுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பாகும் - என்றுள்ளது.

# அன்பழகா சென்றுவா...!



விஞ்ஞானத்துறையில் பயின்று ஆரம்பக் கல்வி ஆசிரியராகி பண்புடன் நல்லாசானாய் விளங்கியவர் அவர்.

பாடுதல், ஆடுதல், கைவினை என அனைத்திலும் சிறப்புத் தேர்ச்சி அன்பழகனிடம் உண்டு. இதனால் பிள்ளைகளை ஈர்க்கும் இனம்புரியாத கவர்ச்சி அன்பழகனிடம் மிகுந்திருந்தது.

எந்தவொரு விடயத்தையும் சலிப்பின்றி நேரம் செல்வது தெரியாமல் அத்தனை பேரையும் ஈர்த்து வைத்துக் கற்பிப்பதில் அன்பழகனுக்கு நிகர் அன்பழகன்தான்.

நோயுற்று இருந்த வேளையிலும் தனது கற்பித்தல் பணியை குறைவின்றி மேற்கொள்ள வேண்டும் என்ற வேட்கை அன்பழகனிடம் இருந்தது.

எம் மண்ணில் ஆரம்பக்கல்விக் கற்பித்தலுக்கு முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்க ஆசிரியர் என்றால் உரத்து உதாரணப்படுத்துவது அன்பழகனைத்தான். பெயருக்கு ஏற்றால்போல் அவரது செயலும் அமைந்ததுதான் தனிச் சிறப்பு.

அன்பொளி நிறுவனத்தில் மாத்திரமல்ல தான் கற்பித்த பாடசாலைகளிலும் பெரும் எண்ணிக்கையில் மாணவரைச் சித்தியடையச் செய்து பெருமை பெற்றான்.

விதி யாரைத்தான் விட்டது. இன்று அது தனது வலிமையை உறுதிப்படுத்திவிட்டது. விதியை நொந்து கொள்வதைத்தவிர எங்களாலும் என்ன செய்துவிட முடியும்?

அன்பும் பண்பும் மிக்க ஆசானுக்கு எமது ஆழ்ந்த இரங்கல்கள்...!

DAN தமிழ் ஒளி கல்வி TV CHANNEL-1

# 'கத்தோலிக்க ஆயர் இல்லத்துக்கு கேரதீவில் அரச காணி அபகரிப்பு'

## மறவன்புலவு சச்சிதானந்தம் குற்றச்சாட்டு!






யாழ்ப்பாணம், ஏப். 03

கேரதீவு ஐயனார் கோயில் அருகே அரச காணி கத்தோலிக்க ஆயர் இல்லத்துக்கு அபகரிக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன்.

இது குறித்து ஊடகங்களுக்கு நேற்று அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்தவை வருமாறு:

"புத்தர் காணியை அபகரிக்கிறார்கள். ஓலம் இடுகிறார் கத்தோலிக்க அருள் நங்கை. (படம் பார்க்க). நான் அவரைப் பார்த்து கேட்கிறேன். இயேசுபிரான் காணியை அபகரிக்கச் சொன்னாரா?

'கேரதீவு ஐயனார் திருக்கோயில் அருகே அரச காணி தொடர்பில் சாவகச்சேரி பிரதேச செயலகக் காணிப் பயன்பாட்டு குழு முன்பு கூடியது. அந்தக் காணியைப் பிரதேச சபைக்கு ஒதுக்கியது.

சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் கொண்டு அந்தக் காணியைத் தொழில் முனைவோர் கேட்டனர்.

பிரதேச சபைக்கு ஒதுக்கிய காணியை உங்களுக்கு ஒதுக்குவதற்குச் சட்டம் இடம் தரவில்லை. அதை மாற்றுவதற்குக் கொழும்புக்கு எழுத வேண்டும் என்று பிரதேச செயலகத்தில் காணி அலுவலர் கூறினார்.

எந்தக் காணியைச் சுற்றுலாத் திட்டத்திற்கு கொடுக்க மறுத்தாரோ அதே காணியைக் கத்தோலிக்க ஆயருக்கு மாற்றிக் கொடுத்துள்ளார் போலும்!

யாழ்ப்பாணத்தில் பல்வேறு சபைகளில் ஆயர்கள் இருக்கிறார்கள். அந்தக் குழப்பத்தைத் தவிர்க்க றோமன் கத்தோலிக்க ஆயருக்கு சொந்தமான இடம் எனப் பெயர்ப் பலகையை யாழ்ப்பாணம் கத்தோலிக்க ஆயர் அந்தக் காணியில் அமைக்கிறார்.

ஐயனார் திருக்கோயிலின் தூய்மையையும் புனிதத்தையும் கெடுக்க, முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைத் துணிவோடு சந்திக்க, சவால்களைச் சந்திக்க சைவ இளைஞர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.' என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-கொரோனா பரவலும் பாதிக்கும் தொழிலாளிகளும்



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஐ நிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் நீர்வேலி முத்துமாரி அம்மன் ஆலய திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கைதடி வாலாம்பிகை அம்மன் ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் நீர்வேலி முத்துமாரி அம்மன் ஆலய திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org